தமிழ் வாழ்க!

# தமிழ்ப் பொழில்

துணர் ௩௩.

ஏ விளம்பி

1957-58

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

---

பொழிற்றொண்டர்:

இராவுசாகேப், S. சுயம்பிரகாசம், B. A., B. L.,

# உள்ளுறை.

ஏவிளம்பி 1957–58 | துணர் ௩௩ | மலர் க–கஉ பக்கம்


1. வழுக்கி வீழினும்
T. V. சதாசிவப் பண்டாரத்தார்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம். 1

2. பழந்தமிழர்களின் அரசியல் ஆர்வம்
சாமி. சிதம்பரனார். 5

3. மதிப்புரை 14, 28, 72, 306, 351, 380

4. நாட்டியம் என்னும் சொல்
வித்துவான். திரு. அடிகளாசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி. 19

5. உள்வரிக் கோலம்
சு. கு. அருணாசலனார், சேலம். 21

6. ந. மு. வே. நாட்டார் பேரவை 13-ஆம் ஆண்டுவிழா 26

7. நற்றிணையில் தாவரங்கள்
வித்துவான். சொ. சிங்காரவேலனார். 29, 48, 113

8. அறங்கள்
டாக்டர் அ. சிதம்பரநாதன் M. A. Ph. D. 33

9. புதுச்சல்லி
சு. கு. அருணாசலனார், சேலம். 43

10. தேவாரப் பண்களின் கட்டளை விளக்கம்
V. S. கோமதி சங்கர ஐயர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம். 49, 81

11. திருவைகாவூர்ச் சிவன் கோவில் கல்வெட்டு வரலாறு
வித்துவான். வை. சுந்தரேச வாண்டையார். 56

12. மக்களுக்காக வாழ்ந்த மன்னர்கள்
சாமி. சிதம்பரனார். 59. 88

13. பொழிற்றொண்டர் கருத்துரைகள் 65, 97, 129

14. கிடங்கில் திருத்திண்டீச்சுரக் கல்வெட்டு வரலாறு
வித்துவான். வை. சுந்தரேச வாண்டையார். 66

15. தாய்மை
"ஒப்புரவு" 71, 128, 277, 307

16. கரந்தைத் தமிழ்ச்சங்கச் செப்பேடுகள்
T. V. சதாசிவப் பண்டாரத்தார், அண்ணாமலைநகர். 73

17. அடுக்குமொழி
சு. கு. அருணாசலனார், சேலம். 75, 119

18. சரிகாபாகா சாதாபாகா
வித்துவான். வீ. உலகவூழியர், சேலம். 92

19. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் இராசேந்திர
சோழனின் செப்பேடுகள் 98, 130, 289, 321, 353

20. குறிப்புப் பெயரெச்ச வினையெச்சங்கள்
அல்வழியில் தனித்தனியிடம் பெறாததேன்?
வித்துவான். சு. குமாரசாமி, புதுவை. 105

21. அறநெறிகாத்த அரசர்கள்
சாமி. சிதம்பரனார். 120

22. 'கோழியூர்' பற்றிய ஒரு குறிப்பு
வித்துவான். அ. கிருட்டினமூர்த்தி
M. A., B. L., B. O. L., (Hons) 136

23. நவமணித் தேர்ச்சியில் தமிழரது கலையுணர்ச்சி
K. சோமசுந்தரம் பிள்ளை B. A., B. L.
141, 170, 212, 249, 281, 312, 341, 367

24. மண்ணாசைகொண்ட மன்னர்கள்
சாமி. சிதம்பரனார். 146, 190

25. தஞ்சை இராசராசேச்சரக் கல்வெட்டு வரலாறு
வித்துவான், வை. சுந்தரேச வாண்டையார்.
152, 167, 254, 273, 346

26. இலக்கணநூல்களிற் காணப்பெறும் பிழை
திரு. அடிகளாசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி. 157

27. கரந்தைத் தமிழ்ச் சங்க
நாற்பத்தாறும் ஆண்டு நிறைவு விழா 161

28. திரு. க. நல்லமுத்து நாட்டார் அவர்கள் மணிவிழா
பொழிற்றொண்டர். 166

29. மதிப்புரை (கங்கா தேவி எழுதிய மதுரா விஜயம்)
நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சை. 177, 217, 235, 262, 316, 336, 377

30. கண்கள்
"தமிழன்பன்" 185

31. முதல் இராசேந்திர சோழனின் செப்பேட்டு வளைமுகப்பு
வித்துவான் சி. கோவிந்தராசன் கரந்தைப் புலவர் கல்லூரி. 193

32. ஆளுவோர்க் கறிவுரைகள்
சாமி. சிதம்பரனூர். 195, 243

33. "பண்ணென்னும் பாடற்கியைபின்றேல்"
சங்கீதம் ப. சுந்தரேசன், குடந்தை. 201

34. தமிழ் முனிவர் அகத்தியர்
T. V. சதாசிவ பண்டாரத்தார், அண்ணமலைநகர். 225

35. பாணர்கள் பயிற்றுவித்த இசைமுறை
சங்கீதம் ப. சுந்தரேசன், குடந்தை. 257, 301

36. குற்றமும் தண்டனையும்
சாமி. சிதம்பரனூர். 264

37. வேந்தர் வாழ்வு
சாமி. சிதம்பரனூர். 293

38. மன்னரும் மக்களும்
சாமி. சிதம்பரனூர். 325

39. மக்கள் தொண்டு
வித்துவான், சொ. சிங்காரவேலனூர். 334

40. தொல்–சொல்–சேனவரையர் உரை விளக்கம்
பண்டித, சித. நாராயணசாமி, திருவையாறு. 349, 372

41. அறப்போர் புரிந்த அரசர்கள்
சாமி. சிதம்பரனூர். 357

42. அந்தாதி இலக்கியம்
திரு. அடிகளாசிரியர். 382

# தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௮ | மலர் |
| --- | --- | --- |
| ௩௩ | ஏவிளம்பி, சித்திரை<br>1957 ஏப்ரல், மே. | க |


## 'வழுக்கி வீழினும்'


T. V. சதாசிவபண்டாரத்தார், அண்ணமலைநகர்.


சோழ நாட்டிலேயுள்ள தஞ்சாவூரைப் பலர் பார்த்திருக்கலாம். அப்பெருநகர் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இடையில் சோழர் பேரரசை நிறுவிச் சிறப்புடன் ஆட்சிபுரிந்த பிற்காலச் சோழ மன்னர்களுக்குத் தலைநகராக விளங்கிய பெருமையுடையது. கி. பி. பதினெண்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில் முதல் இராசராசசோழன் எடுப்பித்த இராசராசேசுவரம் என்னும் பெருங்கோயில் அந்நகரை இக்காலத்தும் அழகுபடுத்திக் கொண்டிருப்பதைக் காணலாம். பிற்காலத்தில் அரசாண்ட நாயக்கரும் மராட்டியரும் அந்நகரையே தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்தமை சரித்திரம் படித்தோர் அறிந்ததே. அங்கு அவர்களுடைய அரண்மனையை இன்றும் காணலாம். அதில் கல்வி கேள்விகளில் வல்ல இரண்டாம் சரபோஜி மன்னன் அமைத்த 'சரஸ்வதி மஹால்' என்ற நூல் நிலையம் ஒன்று, பல்லாயிரக்கணக்கான வடமொழி, தென்மொழி, தெலுங்கு ஏட்டுப் பிரதிகளையும் அச்சிட்ட புத்தகங்களையும் தன்னகத்துக் கொண்டு நிலவுகின்றது. அப்புத்தகசாலை எத்திசையிலுமுள்ள அறிஞர்களைத் தன்பால் இழுக்கும் இயல்பினதாகும். டாக்டர் பர்னல் என்ற பேரறிஞர் அதிலுள்ள வடமொழி ஏட்டுப் பிரதிகளுக்கு ஒரு பட்டியும், திருவையாற்றுக் கல்லூரியில் தமிழாசிரியராயிருந்த காலஞ்சென்ற L. உலகநாத பிள்ளை தமிழ் ஏட்டுப் பிரதிகளுக்கு ஒரு பட்டியும் தயாரித்துள்ளமை அறியத்தக்கது.

இவ்வாறு பண்டைப் பெருமைகளோடு இக்காலத்தும் சிறந்து விளங்கும் அம்மாநகரின் வடபால் அதன் வட எல்லையாக வடவாறு என்ற ஆறு ஒன்று ஓடுகின்றது. அது, முற்காலத்தில் வீரசோழ வடவாறு என வழங்கி வந்தது என்று தஞ்சை இராசராசேசுவரத்துக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. எனவே, அது, கி. பி. 907 முதல் 953 வரையில் தஞ்சாவூரிலிருந்து அரசாண்டவனும் வீரசோழன், வீரநாராயணன் முதலான சிறப்புப் பெயர்களையுடையவனும் ஆகிய முதற் பராந்தகசோழன் ஆட்சிக்காலத்தில் வெட்டப்பட்டதாகும். அதன் வட கரையில் கருந்திட்டைக்குடி என்னும் வைப்புத்தலமும், அதனருகில் கரந்தைத் தமிழ்ச் சங்கமும், தென்

கரையில் தஞ்சைமாநகரின் வடமேற்குப் பகுதியாக வம்புலாஞ் சோலை* என்னும் வைணவத் திருப்பதியும் அமைந்திருத்தல் அறியத்தக்கது.

வடவாற்றின் இரு மருங்கிலும் சோலைகள் செறிந்து காண் போர் கண்களைக் கவரும் இயல்பினவாய்க் குளிர்ந்த நிழலைத்தந்து கொண்டிருக்கும். அவற்றின் இரு கரைகளிலும் இடையிடையே படித்துறைகளும் பிள்ளையார் கோயில்களும் மணம்புரியப்பெற்ற வேம்பும் அரசும் நிலைபெற்ற மேடைகளும் உண்டு. அவ்விடங்களில் எண்ணெய் தேய்த்துக்கொள்வோரும் நீராடுவோரும் உடையுலர்த்து வோரும் உடையணிவோரும் கடவுள் வழிபாடு புரிவோரும் ஆகப் பலர் தம்தம் காரியங்களில் ஈடுபட்டிருப்பார்கள். ஆதலால் அப் பிரதேசங்கள் காலை 5 மணிமுதல் இரவு 9 மணி வரையில் ஆரவார முடையனவாகவே இருக்கும். அவ்வாற்றின் தென்கரை வழியாகவும் வடகரை வழியாகவும் மாலை நேரங்களில் சிலர் உடல் நலங்கருதி நெடுந்தூரம் சென்று வருவதுண்டு.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்குமுன், இளவேனிற் காலத் தொடக்கத்தில் ஒருநாள் மாலை நேரத்தில் முழுமதி தோன்றித் தன் குளிர்ந்த நிலவால் உலகை மகிழ்வித்துக்கொண்டிருக்கும் வேளையில் மூவர் வடவாற்றின் தென்கரை வழியாக மேற்கே போய்க்கொண்டி ருந்தனர். அவர்களுள் ஒருவர் வயது முதிர்ந்தவர்; தமிழ், சமஸ் கிருதம், ஆங்கிலம், மராட்டி, இந்துஸ்தானி, இந்தி ஆகிய மொழி களில் நல்ல புலமையுடையவர்; தருக்க நூல்களையும் வேதாந்த நூல்களையும் நன்கு பயின்று சிறந்த பண்பும் சீலமும் உடையவராக அந்நாளில் விளங்கியவர்; வடமொழியிலும் இந்தியிலுமுள்ள சிறந்த வேதாந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர்; அன்றியும், தம்மை அடுத்த மாணவர்கட்குக் கைம்மாறு கருதாமல் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் தருக்க நூல்களையும் வேதாந்த நூல்களையும் முறையாகப் பாடஞ்சொல்லி வந்தவர். அப்பெரியாரது பெயர் குப்புசாமிராசு என்பது; பின்னர் அவ்வறிஞர் பிரமானந்த சுவாமிகள் என்று வழங்கப்பெற்று வந்தனர்.

மற்றவர் நடுத்தர வயதினர்; சிறந்த தமிழ்ப் புலமையுடையவர்; அக்காலத்தில் சென்னையிலிருந்த ஓர் ஆங்கிலக் கலாசாலையில் தமிழாசிரியராயிருந்து புகழுடன் விளங்கியவர்.

மூன்றுமவர் இருபத்தைந்து வயதிற்குட்பட்ட இளம் பருவத் தினர்; மேலே குறிப்பிட்ட பிரமாநந்த சுவாமிகளிடம் தமிழ் இலக் கண இலக்கியங்களும் தருக்க நூலும் முறையாகப் பயின்று புலமை எய்தியவர்; கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் கி. பி. 1899 முதல் 1932 வரையில் தமிழாசிரியராயிருந்து பாடஞ்சொல்லும் வகையில்

* வடவாற்றின் தென்கரையிலமைந்த 'வம்புலாஞ்சோலை' என்ற திருக்கோயில், பிற்காலத்தில் நாயக்கர் ஆட்சியில் வெண்ணாற் றின் தென் கரையில் இடம்பெற்றுவிட்டது.

மாணவர்கள் உளத்தைப் பிணித்து அவர்களது அன்பிற்கு உரிய வராய்ப் புகழுடன் நிலவியவர். அவ்வறிஞரது பெயர் அ. பால சுப்பிரமணிய பிள்ளை என்பது.

வடவாற்றின் தென்கரை வழியாக மேற்கே சென்ற அறிஞர் மூவரும் வம்புலாஞ் சோலைவரையிற் சென்று அங்குச் சிறிதுநேரம் தங்கி உரையாடியபின்னர் அவ்வழியே திரும்பினார்கள். அவ்வாறு திரும்பி வந்துகொண்டிருக்கும்போது, தஞ்சைப் பெரியார், சென்னை ஆசிரியரையும் தம் மாணவராகிய பிள்ளை அவர்களையும் பார்த்து 'நாம் மூவரும் இவ்வாற்றங்கரை வழியே போய்க்கொண்டிருக்கிறோம். நமது செயல் இவ்வாறு உள்ளது. ஆனால் உள்ளம் ஏதேனும் ஒன்றை எண்ணிக்கொண்டுதானே இருக்கும். உங்கள் மனம் இப் போது எதனைப் பற்றிக்கொண்டிருக்கிறது?' என்று பொதுவாகக் கேட்டனர்.

**பிள்ளை அவர்கள்:—** நாளைக்கு எனக்குப் பள்ளிக்கூடம் உண்டு. ஆதலால் தஞ்சையிலிருந்து கும்பகோணத்திற்குக் காலை 6 மணிக்குப் புறப்படும் புகைவண்டியில் தவறாமல் செல்லவேண்டும். அதன்பொருட்டுப் பொழுது விடிவதற்கு இரண்டு மூன்று நாழிகைக்கு முன்னரே வலம்புரியிலுள்ள என் வீட்டை விட்டுப் புறப்பட்டுவிடுதல் வேண்டும்; அதற்குரிய ஏற்பாட்டை முன் இரவிலேயே செய்து வைத்தல் வேண்டும் என்ற எண்ணங்கள் என் உள்ளத்தை இப் போது பற்றிக்கொண்டிருக்கின்றன.

**சென்னை ஆசிரியர் அவர்கள் :—** என் உள்ளம் இறைவன் திருவடியைப் பற்றிக்கொண்டு நிற்கின்றது. புறக்கரணங்கள் எவ் வேலையில் ஈடுபட்டிருந்தாலும் என் உள்ளம் மாத்திரம் இறைவன் திருவடியில்தான் பதிந்து நிற்கும்.

**தஞ்சைப் பெரியார் அவர்கள் :—** மிக நல்லது! உங்கள் நிலை பெறுதற்கரியது. இந்நிலை யாருக்கும் எளிதில் கிட்டுவதன்று; திருவருளால் இதனை நீங்கள் பெற்றிருப்பதுபற்றிப் பெரிதும் மகிழ் கின்றேன். என் உள்ளம் இப்போது எதனைப் பற்றிக்கொண்டுள் ளது என்பதை நீங்கள் அறிய விரும்புவீர்கள் அல்லவா? அதனையும் சொல்லிவிடுகிறேன். இப்போது மணி ஏழுக்குமேல் இருக்கலாம். பாடங்கேட்கும் மாணவர்கள் வந்து காத்துக்கொண்டிருப்பார்களே; அரைமணிக்கு முன்னரே போயிருக்கலாமே என்ற எண்ணங்கள் என் உள்ளத்தில் ஊடாடிக்கொண்டிருக்கின்றன.

இவ்வாறு வடவாற்றின் தென்கரை வழியாக உரையாடிக் கொண்டுவந்த மூவரும் மாலைக்கடன் ஆற்றும்பொருட்டு ஒரு படித் துறையில் இறங்கினார்கள். அப்போது சென்னை ஆசிரியர் தம் கால் வழுக்கிவிட்டமையால் திடீரென்று '**அப்பாடா**' என்னும் சப்தத் துடன் படித்துறையில் வீழ்ந்தனர்; அடிபடவில்லை; ஆனால் ஆடைகள் மாத்திரம் தண்ணீரில் நனைந்துபோய்விட்டன. பிறகு, அவர் எழுந்து

அவற்றைப்பிழிந்து கட்டிக்கொண்டனர். பின்னர் மூவரும் திருநீறணிந்து மாலே வழிபாடு புரிந்து, வீட்டிற்குத் திரும்பினுர்கள்.

அப்போது, தஞ்சைப் பெரியார், சென்னே ஆசிரியரையும் தம் மாணவரையும் பார்த்து, "படித்துறை நிகழ்ச்சி எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்தது; அது அந்த அளவில் எளிதாகப் போய் விட்டமை மனத்திற்கு ஓர் ஆறுதல் அளிக்கின்றது. அந்நிகழ்ச்சி நமக்கு ஓர் உண்மையை உணர்த்தும்பொருட்டு இறைவன் திருவருளால் நிகழ்ந்தது என்றே எண்ணுகிறேன். சைவசமயாசாரியருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவொற்றியூரில் பாடியருளிய

" அழுக்குமெய்கொடுன் திருவடியடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் ருனல்
பிழுக்கைவாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்பனுகிலுந் திருவடிப்பிழை யேன்
வழுக்கி வீழினுந் திருப்பெயரல்லால்
மற்று நான்அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என்கணுக்கொரு மருந்துரையாய்
ஒற்றியூரெனும் ஊருறைவானே "

என்னும் திருப்பாடலே நீங்கள் அறிவீர்கள். இதில் "வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால் மற்றுநான் அறியேன் மறுமாற்றம்" என்னும் மூன்ரும் அடியின் பொருள் இப்போது சிந்தித்தற்கு உரியது. இறைவன் திருவடியில் பதிந்து நிற்கும் உள்ளமுடைய சுந்தரமூர்த்திகள் தாம் வழுக்கி வீழினும் அப்பெருமான் திருப்பெயரையே தம் நா உரைக்கும் என்றும் மறுமாற்றம் ஒன்றும் அஃது அறியாதென்றும் தெளிவாகக் கூறியிருப்பது அறியத்தக்கது. இறைவன் திருவடியில் பதிந்து நிற்கும் உள்ளமுடையவர்கள் அத்தகைய நிகழ்ச்சிகள் நேருமானுல் 'அப்பா' 'அம்மா' என்று கூற மாட்டார்கள் என்பது இதனுல் நன்கு பெறப்படுகின்றதல்லவா? எனவே, நம் பட்டினத்தாசிரியரின் கூற்று, அவர் உள்ளக் கிடக்கைக்கு முற்றும் மாறுபட்டிருந்தமையால் அதனே வெளிப்படுத்தவே இறைவன் அவ்வாறு செய்தருளினர் என்று தோன்றுகிறது; ஆயினும் பெருந்துன்பத்திற்கு உள்ளாக்காமல் எளிதாக அதனே வெளிப்படுத்தியமைக்குக் காரணம் இறைவனது எல்லேயற்ற கருணேயே எனலாம். தம்மிடம் அன்புடையவர்கள் தவறுமிடத்து, இறைவன் அவர்களேத் திருத்தி ஆட்கொள்ளும் பேரருளாளரன்ரே? அதுவும் பெறுதற்கரிய பெரும்பேறேயாகும்' என்று ஒரு சிறு சொற்பொழிவு செய்து அரியதோர் உண்மையை விளக்கினுர்கள். பிறகு மூவரும் தம்தம் இருப்பிடஞ் சென்றனர்.

---

குறிப்பு:— கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் தலேமைத் தமிழாசிரியராயிருந்தவர்களும் என்னுடைய ஆசிரியருமாகிய காலஞ்சென்ற திரு. அ. பாலசுப்பிரமணிய பிள்ளே அவர்கள் கூறியதே இவ்வரலாருகும்.

# பழந்தமிழர்களின் அரசியல் ஆர்வம்.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

சாமி. சிதம்பரனுர்.

## ஆட்சியே அடிப்படை.

அரசியலை மறக்கமுடியாது; நாட்டுக்கு நலம்புரியும் திறமுள்ள அரசியல் வேண்டும்; ஒழுங்கான ஆட்சியுள்ள நாடுதான் உயர்ந்து நிற்கும். நல்ல ஆட்சியற்ற நாட்டிலே எந்த நன்மையும் நிலவாது.

மக்கள் நலம் பெறுவதற்கு — முன்னேறுவதற்கு — இன்ப வாழ்க்கை வாழ்வதற்குக் கட்டுப்பாடு வேண்டும்; சட்டதிட்டங்கள் வேண்டும். கட்டுப்பாடுகளையும் சட்டதிட்டங்களையும் கண்காணிக்கும் திறமையுள்ளது அரசாட்சிதான், அரசாட்சிக்கு இத்தகைய திறமையில்லாவிட்டால் அது நேர்மையான ஆட்சியாக நிலைத்து நிற்க முடியாது. மக்கள் முன்னேறுவதற்கான கட்டுப்பாடுகளை விதிப்பதும், சட்டதிட்டங்களைச் செய்வதும் ஆட்சியின் பொறுப்பாகும்; கடமையும் ஆகும்.

"அரசாட்சியில்லாத நாடு இருண்டு கிடக்கும்; கதிரவன் அற்ற பகலைப்போல் ஆகும்; விண்மீன்களும், மதியும் இல்லாத இரவைப்போல் ஆகும்; இதுமட்டுமா? இன்னும் எண்ணிப் பார்த்தால் உயிரற்ற உடம்பைப் போலவும் ஆகும்" இவ்வாறு கம்பன் கூறுகின்ருன்.

வள்உறு வயிரவாள் அரசுஇல் வையகம்,
நள்உறு கதிர்இலாப் பகலும், நாள்ஒடும்
தெள் உறு மதியிலா இரவும், தேர்தரின்
உள் உறை உயிர்இலா உடலும் ஒக்குமே.

(அயோ. ஆற்று. 7)

அரசாட்சியற்ற நாட்டிலே உழவுத்தொழில் வளராது; உணவுப் பண்டம் பெருகாது. ஒழுக்கம் நிலவாது. கலைகள் தோன்றமாட்டா; காவியங்கள் பிறக்கமாட்டா. நல்ல ஆட்சியுள்ள நாட்டிலேதான் இவைகள் எல்லாம் வளர்ச்சியடையும். இந்த உண்மையை வரலாற்றிலே காணலாம். பழைய இலக்கியங்களின் வாயிலாக அறியலாம்.

எக்காலத்தில் அரசியல் உருவாகியதோ, அக்காலமுதல்தான் மக்கள் சமுதாயம் நாகரிக நெறியிலே முன்னேறிச் செல்லத் தொடங்கியது. இது வரலாறு கண்ட உண்மை.

தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே அரசாட்சியிலே கவலைகொண்டிருந்தனர்; கருத்தூன்றி நின்றனர்.

இந்த உண்மையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் நமக்கு நவில்கின்றன. 'அரசாட்சியில்லாவிட்டால் நாம் வாழ்க்கை நடத்த முடியாது' என்பதே பண்டைத் தமிழர்களின் முடிவான கருத்து.

இந்த உண்மையை ஒரு புறநானூற்றுப் பாட்டு விளக்கமாகக் கூறியிருக்கின்றது.

நெல்லும் உயிர்அன்றே, நீரும் உயிர்அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்,
அதனால், யான்உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே. (புறம். 186)

இது மோசிகீரனார் என்னும் புலவர் பாட்டு. பண்டைத் தமிழ் மக்களின் கொள்கையை எடுத்துக்காட்டுவது.

"நெல்லும் இவ்வுலக மக்களின் உயிரைக் காப்பாற்றுவது அன்று; தண்ணீரும் இவ்வுலக மக்களின் உயிரைக் காப்பாற்றுவது அன்று. மன்னனைத்தான் இவ்வுலகம் உயிராகக் கொண்டிருக்கின்றது. ஆதலால் ஆளும் அரசன் நான்தான் இவ்வுலகத்துக்கு உயிர் என்பதை மறவாமல் எண்ணியிருக்கவேண்டும்; இதுதான் படைபலம் பொருந்திய அரசனுடைய கடமையாகும்.

நல்ல அரசாட்சியில்லாவிட்டால் மக்களிடையிலே கட்டுப்பாடும் ஒற்றுமையும் காணப்படமாட்டா. மக்களிடையே ஒற்றுமையும் கட்டுப்பாடும் இல்லாவிட்டால், நாட்டிலே எந்த நல்ல செயல்களும் நடைபெறமாட்டா. உழவுத்தொழில் நடைபெறாது; வீணாகப்போகும் நீரைத் தேக்கிவைத்து அதை வேளாண்மைத் தொழிலுக்குப் பயன்படுத்திக்கொள்ளமாட்டார்கள். நல்ல ஆட்சியிருந்தால்தான் இக்காரியங்கள் நடக்கும். இக்கருத்தைக் கொண்டதுதான் இச்செய்யுள்.

## மன்னவனே மக்கள் உயிர்.

ஆரம்பகால அரசு தனி மனிதனுடைய ஆட்சியாகத்தான் இருந்தது. அத்தனி மனிதனைத் தெய்வப் பிறவியாகத்தான் எண்ணினர். அறிவு வன்மையும், உடல் சுற்றலும், படைபலமும் பெற்றவர்கள் முதலில் அரசர்கள் ஆயினர். அவர்கள் மக்களுடைய துன்பங்களைத் தவிர்த்து, இன்பமுடன் வாழ்வதற்கு வழி செய்தனர். இக்காரணத்தால் அக்கால மக்கள் தங்கள் மன்னனை இறைவனாக எண்ணினர்.

'மன்னன் எது செய்தாலும் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்; மன்னன் மொழிக்கு மறுமொழியே கூடாது. அவன் செய்கை பிடிக்காவிட்டால் வாய் மூடித்தான் வாழவேண்டும். வேந்தன் ஆட்சியை விரும்பாவிட்டால் அந்த நாட்டைவிட்டுக் காட்டை நோக்கி வெளியேறிவிடவேண்டும்; மன்னனை எதிர்த்துக்

கிளர்ச்சி செய்வது தவறு' என்ற கொள்கை நிலவியிருந்த காலம் ஒன்று உண்டு.

அரசன் மகன்தான் அரசாளவேண்டும் என்ற கொள்கையும் வேரூன்றிவிட்டது. அரசன் ஆளுவதற்கே பிறந்தவன், அவன் உரிமையைத் தடுக்கும் அதிகாரம் மக்களுக்கு இல்லை; என்ற கொள்கையும் நிலைத்துவிட்டது.

தனியதிகாரமும், வழிவழியாக ஆளும் உரிமையும் ஏற்பட்டிருந்த காலத்தில்தான் அரசனே நாட்டுக்கு உயிர் என்று கருதி வந்தனர். உலக மக்கள் உடல், அரசன் உயிர் என்று எண்ணினர். மிகப் பழங்காலத்தில் தோன்றிய கொள்கை இதுவாகும். மேலே எடுத்துக்காட்டிய புறநானூற்றுப் பாட்டு இந்த உண்மையை விளக்குகின்றது. அரசன் உயிர்; மக்கள் உடல்; என்பதே இப்பாட்டில் உள்ள அரசியல் கருத்து.

தனியதிகாரம் படைத்த மன்னர்கள் தந்நலம் கருதாமல், மக்கள் நலம் கருதி ஆட்சிபுரிந்தவரையிலும், அவர்களுடைய மதிப்புக் குறையவில்லை. அவர்களை மக்கள் தங்கள் உயிராகவே மதித்து வந்தனர். வழிவழியாக ஆளும் உரிமை படைத்திருந்த காரணத்தால், திறமையற்ற மன்னர்களும் தோன்றினர்; தந்நலம்கொண்ட வேந்தர்களும் தோன்றினர். இவர்கள் மக்கள் மதிப்பைப் பெறவில்லை. மக்களால் பழிக்கப்பட்டனர்; தூற்றப்பட்டனர். இத்தகைய மன்னர்களை, வேறு மன்னர்களின் துணைகொண்டு ஆட்சியிலிருந்து விரட்டியடித்தனர் மக்கள்.

## தனியாட்சிக்கு எதிர்ப்பு.

" முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும். (கு. 388)

நீதிமுறை செய்து, மக்களைத் துன்புறுமல் காக்கும் அரசன்தான், மக்களுக்குத் தலைவன் என்று கொள்ளப்படுவான் "

" குடிதழீஇக் கோல்ஒச்சும் மா நில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு" (கு. 544)

குடிமக்களை ஆதரித்து ஆட்சிசெய்யும் மன்னவன் அடியைத்தான் உலகம் ஆதரித்து நிற்கும்"

இத்தகைய எண்ணம் மக்களிடையிலே பரவியபின் மன்னனுடைய தனி அதிகாரம் ஆட்டங்கண்டது. மக்களை மறந்து தந்நலத்திலே மூழ்கிய மன்னர்களால் நாட்டை ஆளமுடியாது என்று நினைத்தனர்; மன்னனுடைய தனி ஆதிகாரம் குறையவேண்டும் என்றும் மக்கள் எண்ணினர். மக்களிடையிலே மதிப்புப்பெற்ற புலவர்களும், தலைவர்களும் அரசன் தவறு செய்யுங்காலத்தில் தாராளமாகக் கண்டிக்கத் தொடங்கினர்.

நேர்மையாக ஆளும் வேந்தன்தான் ஆளுவதற்குத் தகுதியுடையவன் ஆவான்; அவன்தான் மக்களின் மதிப்புக்கும், பாராட்டுதலுக்கும் உரியவன்; என்ற கொள்கை தோன்றியவுடன் ஒரு பெரிய கொள்கை மாற்றமும் ஏற்பட்டது.

தனி அதிகாரம் படைத்த அரசனல் நேர்மையாக ஆள முடியாது; அறிஞர்களின் துணைகொண்டு ஆளுகின்ற மன்னவனே நல்ல ஆட்சியை நடத்த முடியும்.

அரசன் எவ்வளவு திறமையுள்ளவனயிருந்தாலும் ஆராய்ச்சியுள்ள அறிஞர்களைத் துணையாகக் கொள்ளவேண்டும்; அவர்கள் கூறும் கருத்தை மதித்து ஆட்சி நடத்தவேண்டும்.

" அரசன் தவறு செய்யும்போது, அவனைக் கடிந்துகூறி விலக்க வேண்டும். அவனைத் தவறு செய்யாமல் தடுக்கவேண்டும். இத்தகைய அறிஞர்களைத் துணையாகக் கொள்ளாத அரசனுக்கு வேறு பகைவர்களே வேண்டாம். அவன் தானகவே அழிந்துபோவான்.

> " இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பார் இலானும் கெடும் " (கு. 448)

என்பதுபோன்ற கருத்துக்கள் தோன்றின. இக்கருத்துக்களைப் பொதுமக்கள் மதித்தனர்.

இத்தகைய கொள்கை மாற்றம் ஏற்பட்ட பின்னும், ஆளும் குடியிலே பிறந்தவன்தான் ஆளவேண்டும், என்னும் கொள்கை மட்டும் மாறவில்லை. ஆனல் மற்ருெரு பழய அரசியல் கருத்துத் தலைகீழாக மாறிவிட்டது.

## மக்கள் உயிர், மன்னன் உடல்.

மக்கள் உடல்; மன்னன் உயிர்; என்ற கொள்கை மாறிவிட்டது. மக்கள் உயிர்; மன்னன் உடல்; என்ற கொள்கை ஏற்பட்டது. இது ஒரு பெரிய தலைகீழ் மாற்றம். இந்த மாற்றத்தைப் பற்றித் திருவள்ளுவர் தெளிவாகக் கூறவில்லை. தனி மனிதன் ஆட்சியைவிட, அறிஞர்களின் துணைகொண்டு ஆளும் ஆட்சிதான் சிறந்தது என்பதை மட்டும் தெளிவாகக் கூறிவிட்டார்.

அரசனுடைய சர்வாதிகார ஆட்சியைத் தனியாட்சி என்று கூறலாம். அறிஞர்களின் கூட்டுறவுடன் ஆளும் ஆட்சியைத் துணையாட்சி என்று கூறலாம். தனியாட்சியைவிடத் துணையாட்சியே சிறந்தது என்ற கொள்கையைத் தமிழகத்தில் முதலில் பரவச் செய்த பெருமை திருவள்ளுவர்க்கே உண்டு.

திருவள்ளுவர்க்குப் பின்வந்த புலவர்கள் வள்ளுவர் காட்டிய வழியிலேயே, துணையாட்சியைப்பற்றியே, பாராட்டிக் கூறத் தொடங்கிவிட்டனர்.

'மன்னன் உடல், மக்கள் உயிர்' என்ற கொள்கையை முதலில் எடுத்துக்காட்டிய புலவர், சீத்தலைச் சாத்தனார்; மணிமேகலை ஆசிரியர்.

"அரசன் தனது ஆட்சியிலே மாறுபடுவானாயின்—அவனது செங்கோல் கொடுங்கோல் ஆகுமானால் — கிரகங்களின் நிலைமை மாறுபடும். கிரகங்களின் நிலை மாறுபடுமானால் மாநிலம் மழையின்றி வறண்டுபோகும்; மழை பொய்க்குமானால் இவ்வுலகத்து உயிர்கள் வாழமுடியாது; இவ்வுலகத்தில் வாழும் உயிர்கள் எல்லாம் அரசனுடைய உயிர் என்று சொல்வதற்குத் தகுதியற்றதாகும்; அரசன் வாழ்ந்தாலும் உயிரற்ற உடம்பாவான்.—

"கோன்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்;
கோள்நிலை திரிந்திடின் மாரிவறம் கூரும்;
மாரி வறங்கூரின் மன்உயிர் இல்லை:
மன்உயிர் எல்லாம் மண்ஆள் வேந்தன்
தன்உயிர் என்னும் தகுதியின் றாகும்"

(மணிமே. கா. 7. வரி 8-12)

மணிமேகலை ஆசிரியர் காட்டிய இவ்வழியைக் கம்பர் வலியுறுத்திக் கூறுகின்றார். மன்னன் ஆட்சியைவிட்டு, மக்கள் ஆட்சிக்கு அடிப்படையிட்ட இக்கொள்கை கம்பர் கருத்தைக் கவர்ந்தது. ஆதலால் அவர் இதை வலியுறுத்துவதிலே வியப்பில்லை.

தசரதனுடைய ஆட்சியின் பெருமையைப்பற்றிக் கம்பர் பாராட்டிக் கூறுகின்றார். அப்பொழுது மணிமேகலை ஆசிரியரின் கொள்கையைத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றார்.

"தசரதன் வயிரங்கள் பதித்துச் செய்த சிறந்த அணிகலன்களைப் பூண்டவன்; சிங்கம் போன்ற வலிமையை உடையவன்; தனது நாட்டில் உள்ள உயிர்களையெல்லாம் தன்னுயிரைப்போலவே பாதுகாத்துவந்தான். ஆதலால் அவன், குற்றமற்ற இவ்வுலகிலே இறந்தும், இருந்தும் வாழ்கின்ற உயிர்கள் எல்லாம் உறைகின்ற ஓர் உடம்பாக இருந்தான்.

வயிரவான் பூண்அணி மடங்கல் மொய்ம்பினான்,
உயிர்எலாம் தன்உயிர் ஒப்ப ஓம்பலால்,
செயிர்இலா உலகினில் சென்று நின்றுவாழ்
உயிர்எலாம் உறைவதுஓர் உடம்பும் ஆயினான்.

(பால. அரசியல் 10)

இச்செய்யுள், அரசன் உடல்; மக்கள் உயிர் என்ற சிறந்த கொள்கையை வலியுறுத்திக் காட்டுகின்றது. மற்றோரிடத்திலே இக்கொள்கையை இன்னும் தெளிவாக உரைக்கின்றார் கம்பர்.

2

இராமனுக்கு முடிசூட்டத் தீர்மானித்தான் தசரதன். அதன்பின் அவனுக்கு அரசியல் அறிவு புகட்டுமாறு வசிட்டனை வேண்டினான். வசிட்டன் இராமனுக்கு அறவுரைகள் கூறுகின்றான். அவ்விடத்திலும் இக்கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

"இவ்வுலகையே நிலையான உயிராகக் கொள்ளவேண்டும்; அவ்வுயிரைத் தாங்கும் உடம்பு நானே என்று மன்னவன் நினைக்க வேண்டும்; அவ்வாறே மன்னவன் உலக உயிர்களைக் காப்பாற்ற வேண்டும். இத்தகைய மன்னவனை விட்டு, அறநெறி நீங்காது; அவனையே கண்களாகக்கொண்டு நிற்கும். இரக்கம் என்னும் மெய்ந்நெறியிலே மன்னன் ஒழுகுவானாயின்; அவன் வேறு வேள்விகளும் செய்யவேண்டுமோ?

"வையம் மன்உயிராக, அம்மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடல்அன்ன மன்னனுக்கு
அய்யம் இன்றி அறம் கடவாது; அருள்
மெய்யின் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ?"
(அயோ. மந்தரை 17)

இச் செய்யுளும், மன்னன் உடம்பாவான்; மக்கள் உயிர் ஆவர் என்ற உயர்ந்த கருத்தை வலியுறுத்துவதைக் காணலாம்.

## துணை ஆட்சியே சிறந்தது.

"தனி மனிதனுடைய ஆட்சியிலே தவறு நேர்வது இயற்கை. ஆதலால், பல துறையிலும் தேர்ந்த ஆராய்ச்சியாளர்களின் துணை கொண்டு ஆள்வதே சிறந்த ஆட்சியாக இருக்கும்" என்ற கருத்து வள்ளுவர்மூலம் பரவிற்று. இக்கருத்தும் பொதுமக்களின் உள்ளத்திலே குடிபுகுந்தது.

இதன்பின் 'மன்னவன் உயிர்; மக்கள் உடல்' என்னும் பழங் கருத்து வீழ்ந்தது. 'மக்கள் உயிர்; மன்னன் உடல்' என்ற புதுக் கருத்து எழுந்தது.

இதன் பயனாகத் தமிழக அரசியலில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அரசனுக்கு அறிவுரை கூறும் அவைகள் ஏற்பட்டன. பண்டைத் தமிழகத்தின் மன்னர்கள் அறிவுரை கூறும் அவைகளை அமைத்துக் கொண்டனரோ இல்லையோ, அது வேறு செய்தி. அறங்கூறும் அவையோரைக்கொண்ட ஆட்சிதான் சிறந்த ஆட்சி என்ற முடிவு தமிழகத்தில் தோன்றிவிட்டது. இம்முடிவைப் பெரியோர்கள், அறிவுள்ளவர், பொதுமக்கள், அனைவரும் வரவேற்றனர்.

இவ்வுண்மையைச் சிலப்பதிகார ஆசிரியர் நமக்குத் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றார். மணிமேகலை ஆசிரியரும் கூறுகின்றார். 'ஐம்பெருங்குழு; எண்பேராயம்' என்பவை மணிமேகலையிலும் சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றன.

சிலப்பதிகாரம், மணிமேகலைகளுக்கு முற்பட்ட தமிழ் நூல்களில் 'ஐம்பெருங்குழு' எண்பேராயம், காணப்படவில்லை. புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய நூல்களில் அரசியல்பற்றிய கருத்துக்கள் பல காணப்படுகின்றன. அவைகளில், அரசனுக்கு அறிவுரை கூறுவதற்காக, இக்குழுக்கள் இருந்தனவென்று கூறப்படவில்லை. ஆதலால், கூட்டாட்சிக்கு வழிகாட்டியவர் வள்ளுவர் என்றுதான் கொள்ளவேண்டும்.

ஐம்பெருங் குழுவையும், எண்பேராயத்தையும் துணையாகக் கொண்ட ஆட்சி, உண்மையான மக்களாட்சிக்கு வழிகோலிற்று என்பதில் ஐயம் இல்லை. ஐம்பெருங்குழு என்பது என்ன? எண்பேராயம் என்பது யாது? என்பவைகளைக் கண்டால் இவ்வுண்மை விளங்கும். ஐம்பெருங் குழுவைப்பற்றியும், எண்பேராயத்தைப் பற்றியும் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் விளக்கமாகக் கூறியுள்ளார்.

'அமைச்சர், புரோகிதர், சேனுபதியர் தவாத்தொழில் தூதுவர், சாரணர் என்றிவர் பார்த்திபர்க்கு ஐம்பெரும் குழுவெனப் படுமே' என்பது அடியார்க்கு நல்லார் உரையாகும்.

அமைச்சர்கள், புரோகிதர்கள், சேனுபதியர்கள், தூதுவர்கள், சாரணர்கள் (ஒற்றர்கள்) இவர்கள் அரசனுக்கு ஆலோசனை கூறும் ஐம்பெருங்குழுவினர் ஆவர். ஆட்சியை நடத்துவதற்கு வழிகாட்டுகின்றவர்கள்; ஆட்சியை நடத்துகின்றவர்கள்; அமைச்சர் ஆவர்.

காலத்தைக் கணக்கிட்டுக் கூறுவோர்; இன்ன காலத்திலே இன்ன செயல்களைச் செய்யவேண்டும் என்று அறிவுறுத்துவோர்; பருவ காலங்களையும், அவற்றின் இயல்புகளையும் எண்ணிக் கூறுவோர்; புரோகிதர் என்று அழைக்கப்பட்டனர்.

சேனுபதியர், படைத் தலைவர்கள், உள்நாட்டில் அமைதி நிலவுவதற்கும் வெளிநாடுகளுடன் ஒத்த உறவுகொண்டிருப்பதற்கும் துணையாக இருப்பவர்கள் படைத் தலைவர்கள்.

வெளிநாட்டு அரசாங்கத்துடன் ஏதேனும் மாறுபாடு தோன்றினுல், அதை மாற்றுவதற்குத் தூதுவர்கள் வேண்டும்- நல்ல அரசியல் நுட்பமும், சொல் வன்மையும் உள்ளவர்களே தூதுவர்கள். வெளிநாட்டு உறவு வலுப்பட இத்தகைய தூதுவர்கள் இன்றியமையாதவர்கள்.

சாரணர்கள் என்பவர்கள் ஒற்றர்கள். இரகசியப் போலீசார் போன்றவர்கள். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை அரசாங்கத்திற்கு அறிவிப்பவர்கள். அரசன் எக் காரியத்தைச் செய்வதாயினும் மேற்காட்டிய ஐவரையும் கலந்தே செய்யவேண்டும். இதற்காகவே இந்த ஐம்பெருங்குழு ஏற்பட்டது.

எண்பேராயம்.

'கரணத்து இயலவர், கரும காரர்,
கனகச் சுற்றம், கடை காப்பாளர்,
நகர மாந்தர், நளிபடைத் தலைவர்,
யானை வீரர், இவுளி மறவர்,
இனையர், எண்பேராயம் என்ப'

என்பது அடியார்க்கு நல்லார் காட்டும் எண்வகையினரைக்கொண்ட பெரிய அவையாம்.

தொழிலாளர்கள்; அவர்களுடைய தலைவர்கள்; இவர்களுக்குக் கரணத்தியலவர் என்று பெயர்.

அரசாங்க அலுவல்களைச் செய்துவருவோர்; அவர்களுடைய தலைவர்கள்; இவர்களுக்குக் கருமகாரர் என்று பெயர்.

அரசாங்கத்தின் செல்வத்தைப் பாதுகாப்போர், கனகச்சுற்றமாவர். கடை காப்பாளர், அரண்மனையையும், ஏனைய அரசாங்க அலுவலிடங்களையும் காத்துநிற்கும் வீரர்கள் கடைகாப்பாளர் ஆவர். நகர மக்களின் தலைவர்கள் நகர மாந்தர் ஆவார்கள். சேனைத் தலைவர்கள் படைத் தலைவர்கள் ஆவர். யானை வீரர்கள், குதிரை வீரர்கள் இவுளி மறவர் ஆவர். தொழிலாளர், அரசாங்க அலுவலாளர், நிதி காப்போர், காவல் காப்போர், நகர மக்கள், படைத் தலைவர், யானை வீரர், குதிரைவீரர், ஆகிய எட்டு வகையினரின் தலைவர்கள் அடங்கிய சபையை எண்பேராயம் என்று அழைத்தனர்.

ஐம்பெரும் குழு, எண்பேராயம் இவைகளின் ஆலோசனையின் படி நடைபெறும் அரசு சிறந்த அரசாகத்தான் இருக்கும். அந்த அரசாங்கத்தின் தலைவன், ஆளப்பிறந்த அரசகுலத்தைச் சேர்ந்தவனாகவிருந்தாலும் அவன் தன் விருப்பப்படி எதையும் செய்துவிட முடியாது. மக்களின் கருத்தறிந்துதான் ஆட்சிநடத்த முடியும்.

### வளர்ச்சிக்கு வழிகாட்டியது.

இன்று மன்னர் ஆட்சிக்கு இடமில்லை. மக்கள் ஆட்சிக்குத் தான் இடம் உண்டு. இந்நாட்டு மக்கள் அனைவருமே மன்னர்கள் என்று கருதுகின்ற காலம் இது.

பண்டைத் தமிழர்களின் அரசியல் கருத்தும் வளர்ச்சியும், இன்றைய மக்களாட்சிக்கு வழிகாட்டியது; இன்றைய மக்களாட்சியை நோக்கி வளர்ந்து வந்திருக்கின்றது. இது வரலாறுகண்ட உண்மை. வளர்ச்சிதான் மனித சமுதாயத்தின் உயிர்நாடி. வளர்ச்சியில்லாத சமுதாயம் வாழமுடியாது. இதற்குப் பழந்தமிழர் வரலாறு ஆதரவளிக்கின்றது.

மன்னன் தன் எண்ணப்படி எதையும்செய்ய உரிமை படைத்தவன்; அவன் எது செய்தாலும் அதற்கு அடங்கி நடப்பதே நமது கடமை என்று நம்பிவந்தனர். இது ஆரம்பகால அரசியல்.

இதன் பின்னர், மன்னன் எவ்வளவு அறிவாற்றல் படைத்த வனாயினும், அவன் மற்றவர்களின் எண்ணங்களையும் கேட்டறிந்து நடக்கவேண்டும் என்று எண்ணினர். இத்தகைய மன்னனே செங்கோலரசனாகச் சிறந்து விளங்க முடியும் என்று நம்பினர்.

இதன்பின், மன்னன் உயிர்; மக்கள் உடம்பு; என்ற கொள்கை வீழ்ந்தது. மக்கள் உயிர்; மன்னர் உடம்பு; என்ற கொள்கை பிறந்தது.

இதன்பின், ஐம்பெருங்குழு; எண்பேராயம்; என்ற அவையத்தாருடன் இருந்து அரசாளும் மன்னன் ஆட்சியே சிறந்தது என்று கருதினர்.

மன்னர் ஆட்சி கூடாது; மக்களால் தேர்ந்தேடுக்கப்பட்ட தலைவர்களின் ஆட்சிதான் சிறந்தது; என்ற கொள்கையைப் பழந் தமிழ் நூல்களிலே பார்க்க முடியாது.

நல்ல அரசியல்—அரசாட்சி இல்லாமல், நாடு முன்னேற முடியாது; மக்கள் வாழ முடியாது; என்ற பழந் தமிழ் மக்களின் கருத்தே இத்தகைய அரசியல் வளர்ச்சிக்குக் காரணமாகும். பழந் தமிழ்மக்களிடம் குடிகொண்டிருந்த சிறந்த அரசியல் கருத்துக்கள்; அரசியல் கருத்து மாறுதல்கள்; அரசியல் அமைப்பு முறைகள், இன்றைய மக்களாட்சி முறையை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு வளர்ந்து வந்திருக்கின்றன.

பண்டைத் தமிழ் மக்கள் அரசியலைப்பற்றிக் கவலைகொள்ளாமல் இருக்கவில்லை. நல்ல ஆட்சி அமையவேண்டும் என்னும் நாட்டமுள்ளவராயிருந்தனர். இந்த நாட்டமே அவர்கள் நாகரிகத்திலே முன்னேறுவதற்கு உதவிசெய்தது. நமது இலக்கியங்கள் இவ்வுண்மையை விளக்குகின்றன. இனி அவர்களின் சிறந்த ஆட்சி முறையைப்பற்றி அடுத்த கட்டுரையில் காண்போம்.

---

## தமிழ்ச் சங்கக் கல்வி நிலைய நிகழ்ச்சிகள்.

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கிய மன்றத்தின் 16-ஆம் ஆண்டுவிழா 30—3—57ல் நிகழ்ந்தது. அதுபோது பொறிவல்லுநர் T. S. வின்சென்ட் செகராசு, B. E., அவர்கள் தலைமைதாங்கி, மாணவ மாணவிகளுக்குப் பரிசு வழங்கினார்கள். புலவர் R. ஏகாம்பரநாதன் அவர்கள் "அரசு" என்பதுபற்றிப் பேசினார்கள். பள்ளி மாணவ மாணவிகளால் சிறந்த கலை நிகழ்ச்சிகளும், வித்துவான் C. கோபாலன் அவர்கள் எழுதிய "கிள்ளி வளவன்" என்ற இலக்கிய நாடகமும் நிகழ்ந்தன.

சென்ற இதழின் தொடர்ச்சி.

"சிலப்பதிகாரத் திசை நுணுக்க விளக்கம்" திரு. வீணை வித்துவான், S. இராமனுதன் அவர்கள். நூல் கிடைக்குமிடம் :— 20, சைடோஜித்தெரு, கலைமகள் இசைக்கல்லூரி, திருவல்லிக்கேணி, சென்னை—5.

இதுபற்றி இராமனுதன் அவர்கள் சிந்திக்காது விடுத்ததால் நூலில் பாலைகள் யாவற்றிற்கும் (செம்பாலை நீங்கலாக) தற்கால இராகங்களைத் தவருகக் கூற நேரிட்டுவிட்டது. இளி எனும் இசையை மத்திமம் எனக்கொண்டதும் தவருகிவிட்டது.

பரதமுனிவர் கூறியபடியே

ச — ரி — க — ம — ப — த — நி
4 — 3 — 2 — 4 — 4 — 3 — 2 எனக்கூறிய

ஆசிரியர், இங்ஙிரலையே ம — முதலாக எடுக்க

ம — ப — த — நி — ச — ரி — க
4 — 4 — 3 — 2 — 4 — 3 — 2 ஆகவமைவதை,

நூலில் பக்கம் 28-ல் ஒப்புக்கொண்ட இராமனுதன் அவர்கள், ம எனும் இசை பண்டைய குரல், என்பதை சற்று சிந்தித்திருக்கலாம் எனவும் தோன்றுகிறது.

ஆசிரியரே "இளி குரலாயது கோடிப்பாலை" எனக்கூறுமிடத்தும் செம்பாலையின் குரல் நிற்கும் துலாத்தில் கோடிப்பாலை நிற்கும்" எனவும் கூறுகிருர். ஆகவே இங்கே கூறப்பெறும் இளி என்ற பண்டைய இசை பிற்காலத்தில் ஷட்ஜமாகும் என்பதை ஆசிரியர் நன்கு உளங்கொண்டு விளக்கியிருந்தால் நலமாக இருக்கும். ஆகையால் இப்பகுதிகொண்டே ஆசிரியரை நன்கு சிந்திக்குமாறும் கேட்டுக்கொள்கிருேம்.

நூலில் 80-ம் பக்கத்தில் ஆசிரியர்—

"ஆகவே நம் தமிழ்நாட்டில் இன்றும் வழங்கும் இசை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இசைமரபை ஒட்டியே நடந்துவருவது அறிஞர் அறிந்து இன்புறற்பாலது" எனத் தெளிவுபட எழுதியிருப்பது மிகவும் போற்றத்தக்கதாகவுள்ளது.

பண்டைய இசைகள் ஏழும், அதன் தன்மை, அலகுகள் இவற்றைக்கொண்டு இக்காலம் எவ்வாறு விளங்குகின்றன

என்பதை நன்கு, விளக்கியிருந்தால் மிகவும் பயனுடையதாயிருக்கும். மேலும் கற்போருக்கும் நல்லதெளிவு ஏற்படக்கூடும்.

பக்கம் 80ன் இறுதியிலும் 81வது பக்கத்தின் பாதி அளவிலும் இசைக்கலையில் 24 அலகுகள் என்று கொண்டவர்களின் பிற்காலக் கொள்கைகளை நன்கு காரணம் காட்டி விளக்கிப் பண்டைய இசைத்தமிழ் முறையில் 22 அலகுகளே கொண்டனர் எனவும், அதுவே மிகப்பழைய முறை எனவும் நன்கு வலியுறுத்தியிருப்பது போற்றுதற்கு உரியது. மேலும் குரல் முதலாக, துத்தம் முதலாக, கைக்கிளை முதலாக, உழை முதலாக, இளி முதலாக, விளரி முதலாக, தாரம் முதலாக—என்று எடுத்து வல முறையாகவோ அல்லது இட முறையாகவோ (அதாவது—மேல் நோக்கிச் செல்வதையோ அல்லது கீழ் நோக்கிச் செல்வதையோ) நன்கு தெளிவுபடுத்தாதிருப்பது ஒரு குறைபாடாகவே உள்ளது. இப்பகுதி விரிவாகவும் தெளிவாகவும் இருக்கலாம்.

எடுத்துக்காட்டாக பாலைகளைப்பற்றி ஒன்று கூறத் தோன்றுகிறது. கோடிப்பாலை யெனும் பழய பாலையொன்றினை பேரறிஞரான விபுலானந்த அடிகளார், மேலும் கணித நூல்களில் மிகவும் தேர்ச்சிபெற்றவரான அவர், அலகுக் கணித முறைகளைக் கொண்டே இக்கால இராகம் கரகரப்ரியா என நன்கு உறுதியாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார். இராமநாதன் அவர்களோ கோடிப்பாலையை இந்நூல் பக்கம் 28ல் சங்கராபரணம் ஆகும் என்று கூறுகிறார்.

நூலாசிரியரே, (இராமநாதன்) பக்கம் 69ல், பரதமுனிவர் கூறிய சட்சக்கிராமத்திற்குரிய சுருதி முறைகளைக் காட்டி சட்சக்கிராமத்தின் சுரங்கள் கரகரப்ரியா எனும் இராகத்திற்குரிய சுரங்களாகும் எனக் கூறியிருக்கின்றார். ஆனால், தெளிவுபடுத்தாமலேயே அதன் முறையை—

ச — ரி — க — ம — ப — த — நி —
4 — 3 — 2 — 4 — 4 — 3 — 2 — எனக் காட்டப்

பெற்றுள்ளதால்,

பொழிலன்பர்கள் அறியும் பொருட்டும் இசைவாணர்கள் அறியும்பொருட்டும் இப்பகுதியினை சற்று விளக்கவேண்டியுளது.

ஆகையால் நாமே அவ்விளக்கத்தினைத் தருவேம். மேலே காட்டிய நிலை, இக்கால இசைவழக்குப்படியறிய,

ச – 4 — தொடங்குமிடம் (ஷட்ஜம்)
ரி – 3 — சுத்த ருஷபம் (மூன்று சுருதி)
க – 2 — ஐந்து சுருதியுள்ள சாதாரண காந்தாரம்.
ம – 4 — சுத்த மத்திமம் (ஒன்பது சுருதி)
ப – 4 — பஞ்சமம் (பதின்மூன்று சுருதி)
த – 3 — சுத்த தைவதம் (பதினாறு சுருதி)
நி – 2 — பதினெட்டு சுருதியுள்ள கைசிகி நிஷாதம். என வமையும்.

ஆகவே, ஷட்ஜம், சுத்தருஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்தியமம், பஞ்சமம், சுத்ததைவதம், கைசிகிநிஷாதம் என்ற இசைகளையுடைய தற்காலத்திய இராகம் **அநுமத்தோடி** என்ற இராகமேயாகும் என்பதை நன்கு அறியவும்.

பரத முனிவர் கூறிய அலகு நிலைகள் ச, முதலாகத் தொடங்க இவ்வாறு அமைவதை நன்கு தெளிவாக உணரலாம்.

இந்நிரலைத்தான் ஷட்ஜக்கிராமம் என ஆசிரியரும் நன்கு கூறுகிறார்.

மேலும், இந்நிரலை, ச எனும் இசைக்குக் கீழ் உள்ள நிஷாதம் முதலாக எடுத்தால்

பரத முனிவர் கூறியது:—

நி — தொடங்குமிடம் (ஷட்ஜம்)
ச – 4 — சதுச்ருதி ருஷபம்
ரி – 3 — ஏழு சுருதியுள்ள சாதாரண காந்தாரம்
க – 2 — சுத்த மத்தியமம் (ஒன்பது சுருதி)
ம – 4 — பஞ்சமம் (பதின்மூன்று சுருதி)
ப – 4 — சதுச்ருதி தைவதம் (பதினேழு சுருதி)
த – 3 — இருபது சுருதியுள்ள கைசிகி நிஷாதம்
நி – 2 — மேல் ஷட்ஜம் (இருபத்தியிரண்டு சுருதி)

ஆகவே, ஷட்ஜம், சதுச்ருதிருஷபம், சாதாரண காந்தாரம், (ஏழுசுருதி) சுத்தமத்திமம், பஞ்சமம், சதுச்ருதிதைவதம், கைசிகிநிஷாதம்' (இருபது சுருதி) என்ற இசைகளைக்கொண்ட இராகந்தான் தற்காலம் **கரகரப்பிரியா** எனும் ராகமாகும் என்பதையும் உணரலாம்.

இவ்விளக்கந்தராமலேயே; "சட்சக்கிராமத்தின் சுரங்கள் கரகரப்பிரியா எனும் இராகத்திற்குரிய சுரங்களாகும்" எனக் கூறுவது பொருந்தவில்லை.

மேற்கூறிய, நிஷாதமுதலாக எடுத்துக்காட்டிய முறையே. பண்டைய சகோட யாழில், இளிக்கிரமத்தில் உழைமுதல் கைக்கிளை யிறுவாயாகக் காட்டிய, கோடிப்பாலையாகும். ஆகவே; பண்டைய கோடிப்பாலை, பரத முனிவர் கூறியபடி அலகுகளை நிஷாதம் முதலாகக் காண, இக்காலம் கரகரப்பிரியா எனும் ராகமாக வருவதே, உண்மையென நன்கு தெரியவருகிறது.

இவ்வுண்மையையறிந்த விபுலாநந்தர் கோடிப் பாலையை இக்காலம் கரகரப்பிரியா ராகம் என்றார். ஆனால் இராமநாதன் அவர்கள் முறைகளை அடிப்படையில் ஒப்புக்கொண்டும் அரும் பாலையை கரகரப்பிரியா என்பது பொருந்தவேயில்லை. சிறந்த பிழையும் ஆயிற்று.

பண்டைய பாலைகள் யாவும், அதாவது நரம்பின் ஒலிகள் நரம்புகளின் நீளங்கள்பற்றிய அதன் ஒலிப்பு முறைகள், மாத்திரைகள், (அலகு) எல்லாம் சிறந்த கணித முறையிலேயே அறிந்து உணரப்பட்டதாகத் தெரியவருகின்றது.

கணித முறைகள் ஐந்தாண்டு குழந்தையொன்று கூறினாலும் ஐம்பதாண்டு முதியோன் ஒருவன் கூறினாலும் கூட்டுத் தொகையோ பெருக்கல்தொகையோ இதுபோன்ற மற்றவையோ ஒன்றாக இருக்கவேண்டுவதே இயல்பு. வேறுபட்டுத்தான் வர வேண்டும் என்பது மன்னிக்கக்கூடாத பிழையாகும்.

பொழிலன்பர்கள் அறியவேண்டி விபுலானந்த அடிகளார் கூறுவதையும் இராமநாதன் அவர்கள் கூறுவதையும் இங்கு ஒருங்கே காட்டவேண்டியுள்ளது.

| விபுலானந்தர் யாழ் நூலில் கூறுவது (இசைகள்) | இராமநாதன் கூறுவது |
|---|---|
| குரல் — மத்திமம் | குரல் — சட்சம் |
| துத்தம் — பஞ்சமம் | துத்தம் — ரிடபம் |
| கைக்கிளை — தைவதம் | கைக்கிளை — காந்தாரம் |
| உழை — நிஷாதம் | உழை — மத்திமம் |
| இளி — ஷட்ஜம் | இளி — பஞ்சமம் |
| விளரி — ருஷபம் | விளரி — தைவதம் |
| தாரம் — காந்தாரம் | தாரம் — நிஷாதம் |

இக் கருத்துக்களை இருவரின் நூல்களையும் நன்கு பயின்று அறிஞர்கள் உறுதி செய்துகொள்ளவேண்டும். பண்டைய இசைத் தமிழ் நுட்பங்கள் பலவும் விபுலானந்த அடிகளார் ஒருவாலேயே நன்கு விளக்கம் பெற்றது எனவும் இசையாராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

(பாலைகள்)

| யாழ் நூலில் | இந்நூலில் |
|---|---|
| 1. மேற்செம்பாலை—கல்யாணி | மேற்செம்பாலை—நடபைரவி |
| 2. செம்பாலை—ஹரிகாம்போதி | செம்பாலை—ஹரிகாம்போதி |
| 3. படுமலைப்பாலை—நடபைரவி | படுமலைப்பாலை—கல்யாணி |
| 4. செவ்வழிப்பாலை-சுத்ததோடி | செவ்வழிப்பாலை—தோடி |
| 5. அரும்பாலை—சங்கராபரணம் | அரும்பாலை—கரகரப்ரியா |
| 6. கோடிப்பாலை-கரகரப்பிரியா | கோடிப்பாலை—சங்கராபரணம் |
| 7. விளரிப்பாலை-தோடி | விளரிப்பாலை-(பெயர் காட்டப்படவில்லை) |

இம்மாறுபாடுகள் யாவுமே நன்கு சிந்திக்கத்தக்கனவாம்.

இதுகாறும் யாம் கூறியவற்றை வீணைவல்ல திரு. எஸ். இராமநாதன் அவர்கள் எழுதிய நூலுக்கு ஏதோ மறுப்பு எழுதி விட்டதாக எண்ணவே வேண்டாம்.

எமது சங்கத்தின் மூலம் வெளியான யாழ் நூலையும் படித்து எமது உள்ளத்தில் தோன்றிய கருத்தினை வெளியிட்டோம். பண்டைய இசை முறைகளை ஆராய்ச்சி செய்யுங்கால் நாமே முதலில் ஆராய்கின்றோம் என்ற எண்ணம் இல்லாமல் ஆராய்ந்த பெரியோர்களின் கருத்துகளையும் உணர்ந்து அறிந்துகொள்வது மிகவும் இன்றியமையாததாகும்.

ஆகவே இக்காலத்கில் நல்ல அரிய தலைப்பாகிய "சிலப்பதிகாரத் திசை நுணுக்க விளக்கம்" என்ற நூலை எழுதும் அளவிற்கு வீணைவல்ல திரு. இராமநாதன் அவர்கள் முன் வந்தது தமிழ் மக்களால் என்றென்றும் பாராட்டற்குரியதாகும். மேலும் இந்நூலால் இக்காலத் தமிழ்ப் புலவர்களும் இசைப் புலவர்களும் (சங்கீத வித்துவான்களும்) தமிழ் நாட்டில் பழங் காலத்தில் விளங்கிய இசைக் கலையை இனியேனும் அறிந்து கொள்வார்கள் என்றும் இன்றைய கர்நாடக சங்கீதம் நமது பண்டைய இசைத் தமிழே என்றும் மேலும் மேலும் இவ்வகையான ஆராய்ச்சியாளர்கள் தமிழ் நாட்டில் தோன்றி உண்மையான வரன்முறையோடு கூடி ஆராய்ந்து உண்மையை வெளிப் படுத்தவேண்டும் எனவும் கூறி இந்நூலுக்கு எமது மனமார்ந்த மதிப்புரையையும் இராமநாதன் அவர்களுக்கு நன்றியையும் இதன்மூலம் மனமுவந்து தெரிவித்துக்கொள்கின்றோம்.

# நாட்டியம் என்னுஞ் சொல்.

(திரு. அடிகளாசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி.)

ஆயிரக் கணக்கான யாண்டுகட்கு முன்னர் தமிழகம்போந்த ஆரியர் தமிழ் மக்களுடன் கலந்து வாழ்ந்து வரலாயினர். அக் காரணத்தால் ஆரியச் சொற்கள் பல தமிழில் புகுந்தன; தமிழ்ச் சொற்கள் பல ஆரிய மொழியுள் புகுந்தன. அங்ஙனம் புகுந்த சொற்களுள் நாட்டியம் என்னும் சொல்லும் ஒன்றாகும்.

**வடமொழி நிகண்டு கூறுவது:** தாண்டவம், நடனம், நாட்டிடம், லாஸ்யம், நிருத்யம், நர்த்தனம் என்னும் ஆறும் நாட்டியத்தைக் குறிக்கும் சொற்கள் என்பதை, வடமொழியில் அமரசிம்கன் செய்த நாமலிங்கானு சாசனம் என்னும் நிகண்டி லுள்ள, "தாண்டவம் நடநம் நாட்யம் லாஸ்யம் நிருத்யஞ்ச நர்த்தனம்"—(164) என்னும் சுலோகத்தால் நாம் அறிந்து கொள்ளுகின்றோம். இங்கே நாட்டியம் என்பது ஆட்டத்தை மட்டும் குறிக்கின்றது. இச்சுலோகத்தின் பின்னுள்ள "தௌர்ய திரிகம் நிருத்தகீத வாத்யம் நாட்ய மிதம் த்ரயம்"—(165) என்னும் சுலோகத்தால் தௌர்ய திரிகம், நாட்டியம் என்னுஞ் சொற்கள் நிருத்தம், கீதம், வாத்யம் என்னும் மூன்றுங் கூடியதற்குப் பெயரென்று உணர்ந்துகொள்ளுகின் றோம். ஆகவே நாட்டியம் என்னும் சொல்லிற்கு ஆட்டம் என்றும், நிருத்தகீத வாத்யமென்கிற மூன்றுங்கூடியதென்றும் வடமொழியிற் பொருளிருத்தலை நாமலிங்கானுசாசனம் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றது.

"சிலப்பதிகாரமும் அதன் உரையாசிரியரும்.

"பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூல் நன்குகடைப் பிடித்துக்
காட்டிய ளாதலின்" (சிலப்பதிகாரம்—அர.)

என்னும் பகுதிக்கு "பொலிவினை யுடைத்தொரு பொற்கொடி யானது கூத்தாடினாற்போல தாண்டவம், நிருத்தம், நாட்டியம் என்னும் மூன்று கூறுபாட்டினும் நாட்டியமென்பது புற நடத்தையாதலின், அதனை நூல்களிற் சொன்ன முறைமை வழுவாமல் அவிநயங் காட்டிப் பாவகந் தோன்ற விலக்குறுப்புப் பதினுலின் வழுவாமல் ஆடிக்காட்டினளாதலின்" என்று அரும்பத வுரையாசிரியர் எழுதிக் காட்டியுள்ளதால் அவ்வுரையி லிருந்து தாண்டவம் முதலான மூன்றும் ஒன்றாகாமல் வெவ்

வேறு வகையவென்றும் அம்மூன்றுள் மூன்ருவது வகையைச் சார்ந்தது நாட்டியமென்றும், அது புறநடமென்றும் பெயர்பெறு மென்றும், அது பாவகந் தோன்ற அபிநயங் காட்டி ஆடப்படுவ தென்றும் அறிந்துகொள்ளுகின்ரும். பாவகம் என்பது உள்ளக் கருத்து. அக்கருத்து புறத்தார்க்குத் தோன்றும்படி மெய்ப்பாடு காட்டுவது அபிநயமாம்.

**நாட்டியமென்னுஞ் சொல்லின் பொருள்:** எனவே நாட்டியமென்னுஞ் சொற்கு ஆட்டம் என்பது பொருளா? நிருத்த கீத வாத்யமென்னும் மூன்றுங் கூடியதென்று பொருளா? அபிநயங்காட்டிப் பாவகம் தோன்ற ஆடப்பெறுவ தென்று பொருளா? அச்சொல் எந்த வேரிலேயிருந்து தோன் றிற்று? என்று ஆராய்வோம்.

சேந்தன் திவாகரத்துள் பண்புபற்றிய பெயர்த் தொகுதி யுள் "நாட்டியங் குறிப்பே" என்ரெரு நூற்பா காணப்படு கின்றது. இந்நூற்பாவின்படி நாட்டியம் என்னும் சொல் மனக் குறிப்பை உணர்த்துவதாகும். மனக்குறிப்பை வடநூலார் பாவம் அல்லது பாவகம் என்று கூறுவர். பாவகமாகிய மனக் குறிப்பு அபிநயங்களால் புறந்தோன்றும்படி ஆடப்பெறுவதாகை யால் அவ் ஆட்டத்திற்கு மனக்குறிப்பை உணர்த்தும் நாட்டியம் என்னும் சொல்லைப் பெயராக வழங்கினர்.

**நாட்டியமென்பது தமிழ்ச் சொல்:** இந்நாட்டியமென்னுஞ் சொல்லைப் பலரும் வடசொல்லென்றே கருதியுள்ளனர். இது வடசொல்லா தமிழ்ச் சொல்லா என்று ஆராயின் நாட்டம், நாடுதல் என்பவை புறத்தே கண் நோக்கத்தையும், அகத்தே மனநோக்கத்தையும் உணர்த்தி வருகின்ற தூய தமிழ்ச்சொல் ஆதலின், இவற்றின் பகுதியாகிய 'நாடு' என்பதிலிருந்தே 'நாட்டியம்' என்னுஞ் சொல் தோன்றியுள்ளதென்பது மொழி நூலறிஞர்க்கு நன்கு விளங்கும். இந்நாட்டியம் என்பது வட மொழி புகுந்த தமிழ்ச் சொல் என்க.

தொல்காப்பியத்திலுள்ள மெய்ப்பாட்டியலின் மொழி பெயர்ப்பாக வடமொழியில் ஒரு நூலுண்டு. அந்நூலின் பெயர் நாட்டிய சாஸ்திரம் என்பதாகும். மெய்ப்பாடு மனக் குறிப்பால் தோன்றுவதாகலின் மனக்குறிப்பை உணர்த்தும் நாட்டியமென்னும் பெயராலேயே அந்நூலுக்குப் பெயர் அமைந் துள்ளதையுங் காண்க.

# உள்வரிக்கோலம்.

சு. கு. அருணசலனர்,
அறுவைவணிகர், அம்மாப்பேட்டை, சேலம்.

வேணசை உடை (பேன்சி திரசு Fancy dress) என்பதை மாற்றுடையென்று புலவரென்று பெயர் படைத்தார் சிலர் தம் மாணவர்க்குக் கூறி வருகின்றனர். மாணவர் சிலர் இதுபற்றி எம்மை வினவியதால் மாற்றுடையென்றவர் கூற்றின் புரைமையை விளக்கிக் காட்டும் கடனே மேற்கொண்டாம்.

வேணசை உடை (பேன்சி திரசு) என்பது வேற்றுருக் கொண்டு நடித்தல், வடிவு மறைத்தல், பொய்யுரு (Disguise) என்பதையே குறிக்கின்றதென்பது யாவருமறிவர். இக்கோலங் கொண்டான் உடுத்தியிருக்கும் உடையில் அவனுடைய உண்மை உருவம் (வடிவம்) மறைந்து போதலும் காண்க. மணிமேகலை காயசண்டிகையின் வடிவம்கொண்டதும், ஐவகைச் சமயங்களின் பொருளறிய (அவள்) ஆண்கோலங்கொண்டதும் அது. இதனை வடவர் "கிருத்திரிமவேடம்" (சிலப்பதிகாரம் அரும்பதவுரை ரு:உகசு that which is artificial செய்யப்பட்ட கோலம் (வேடம்) (போலிக்கோலம்) என்பர். இதனை ஆங்கிலர் "வரலாற்றிலும், கட்டுக் கதையிலும் உள்ள ஒருறுப்பை (character பாத்திரம்) நடித்துக்காட்டுதற்கு ஒருவன் தன் வேணசை (Fancy)க்கேற்பக்கொள்ளும் உடை" (Dress arranged according to the wearer's fancy to represent some character in history or fiction என்பர். இதில் உடை அணிவதுடன் புள்ளியிடுதல் முதலிய கோலமும் செய்துகொள்ளக் காண்கின்ருேமாதலால் "பேன்சிதிர"சென்னும் ஆங்கிலச் சொல்லினும் உள்வரிக்கோலமென்னும் தமிழ்ச் சொல்லே பொருட்சிறப்புடைத்து, அன்றித் தலைமைபற்றி ஆண்டு உடை கூறப்பட்டதெனின் அதற்கு (உடை Dress)க்கோலமெனப் பொருளுரைக்க. மாற்றுடையென்னுஞ் சொற்கு மேற்கூறிய பொருளின்மையான் அதனை மாற்றுடையெனல் பொருந்தாதென்க.

மாற்றுடை என்பது பெரும்பாலும் வண்ணன் வெளுத்த உருப்படியையும், நலம்பொலங்களில் அவனுல் (வண்ணன்) கொடுக்கப்படும் துணியையுமே குறிக்கக் காண்கின்ருேம். அன்றியும் மாற்றுடையென்பது ஒருகாலைக் கொருகால் மாற்றியுடுத்தும் உடை (Change of dress)யையும் கூடுதலுடை (Spare dress)யையும் குறிக்கும். மாற்று என்னும் சொல்

பண்டமாற்று, மாற்று மருந்து முதலிய பல பொருளில் வழங்கும். அவை ஈண்டைக்கு வேண்டா. இவற்றால் அதனை 'மாற்றுடை' என்றல் எத்துணைத் தெரியாமை என்க. இனி மாற்றுக்கோலம் என்று சொல்லுதல் ஆகாதோவெனின், அஃதெற்றுக்கு இதனை குறிக்கப் பண்டே சொல்லுண்மையானென்க. அதுயாதோ வென மீட்டும் வினவில், உள்வரிக்கோலம் அல்லது உள்வரி யென்பது. இஃதெண்வகை வரிக்கூத்துள் ஒன்று. இதனால் இவ்வாடல் இந்நாட்டில் பண்டைக்காலமுதல் வழங்கி வந்ததெனவும் பிறரால் புதிதாகப் புகுத்தப்படாததெனவுமறிக.

இனி உள்வரிக்கோலம் என்பதன் சொற்பொருள் உரைப்பாம். உள்—மறைவு 'ஆள் உள்ளே இருக்கிறான்' என்பதில் உள் என்பது அப்பொருட்டாதலறிக. வரி என்பது புனைதல், கட்டுதல், கோலம், அழகு, அலங்கரித்தல், நிறம், தன்மை எனப் பல பொருள்படும் பல பொருளொருசொல். வரி என்பது கோலம் எனவும் பொருள்படுகலின் அஃது உள் வரி எனவும் நின்றது. வரிந்தால் ஆள் தெரியும். ஆனால் உள் வரியில் ஆள் தெரியாது. உள் வரியில் புனைவும் கோலமும் இருத்தல் காண்க.

இனி உள்வரிக்கோலம் என்பதுபற்றிச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றுள் வந்துள்ள சில பகுதிகளைக் கூறுவேம்.

"கருமுகில் சுமந்து குறுமுயல் ஒழித்தாங் (கு)
இருகருங் கயலோ டிடைக்குமிழ் எழுதி
அங்கண் வானத்(து) அரவுப்பகை யஞ்சித்
திங்களும் ஈண்டுத் திரிதலு முண்டுகொல்
(சிலம்பு ரு; உ0௪—எ)

என்னும் பகுதி காற்றுத் திரிதரும் மருகில் பரத்தையர் திரிகின்றனர்; அவர்கள் எப்படித் திரிகின்றனர் என்பதைக் கூறும். அப்பகுதிக்கு "அழகிய வானத்திடத்தே திரியும் அரவாகிய பகைசெறுமென்றஞ்சி ஆண்டுத் திரியாமல் ஒரு பெரிய முகிலை (கூந்தல்)ச்சுமந்து சிறிய முயலை (களங்கம்)யொழித்து இருமருங்கினும் இரண்டு கருங் கயலினையும் (கண்) இடையே ஒரு குமிழ மலரையு (மூக்கு)மெழுதி இங்ஙனம் உள்வரிக் கோலங் (அ: அகூ) கொண்டு திங்களும் இந்நிலத்தே திரிதருகின்றது கொல்லோ" எனவுரைத்தார் அடியார்க்கு நல்லார்.

"இருநில மன்னற்குப் பெருவளங் காட்டத்
திருமகள் புகுந்ததிச் செழும்பதி யாமென
எரிநிறத் திலவமு முல்லையுமன்றியும்

கருநெடுங் குவளையுங் குமிழும் பூத்தாங்(கு)
உள்வரிக் கோலத் துறுதுணை தேடிக்
கள்ளக் கமலந்திரிதலுமுண்டுகொல்

(சிலம்பு ரு உகஉ—எ)

உரை வருமாறு. "பெரிய நிலத்தினையுடைய சோழ மன்னர்க்குத் தன் பெருவளங் காட்டத் திருமகள் புகாரிடத்தே புகுந்தாள். அவனைத் தேடித் தீநிற இலவம்பூ, முல்லை இவற்றைத் தவிர கருநெடுங்குவளையும் குமிழ மலரும் பூத்து இங்ஙனம் கொண்ட உள்வரிக் கோலத்தோடு தனது அன்புமிக்க துணையைத் தேடிக் கள்ளத் (கள்ளையுடைய) தாமரைத் திரிதலும் உண்டாயிற்றோதான்" "கள்ளக் கமல" மென்றார் உருமாறித் திரிதலின் என்றும் தன்னகத் திருப்பாளாகலின் திருமகளைத் தாமரைக்குத் துணையென்றார். இதனுள் தாமரை மலரே இலவம் முதலியவற்றைப் பூத்து உருத்திரிந்து முகம் என்ற பெயருடன் திரியா நிற்கின்றதெனை உரைப்பதால் உள் வரிக் கோலம் என்பதற்கு உருமாறுதல், வடிவு மறைத்தல் எனப் பொருளாதல் காண்க.

"அந்தரத்துள்ளோர் அறியா மரபின்
வந்து காண்குறூஉம் வானவன் விழவும்"

(சிலம்பு கூ: எஉ—ரு)

என்பதனுள் அறியா மரபின் என்பதற்கு அடியார்க்கு நல்லார் உள் வரி என்றுரைத்தார். இதனாலும் உள்வரி என்பதனியல்பறிக. உரை வருமாறு. விண்ணுலகத் (சுவர்க்கம்) திலுள்ளோராகிய தேவரெல்லாம் உள்வரிகொண்டுவந்து காணப் படும் இந்திர விழாவும்,

"அந்தி மாலை வந்ததற்கிரங்கிச்
சிந்தைநோய் கூருமென் சிறுமைநோக்கிக்
கிளிபுரை கிளவியுமடவன நடையும்
களிமயிற் சாயலும் கரந்தனளாகிச்
செருவேனெடுங்கட் சிலதியர் கோலத்(து)
ஒருதனி வந்தவுள்வரி யாடலும்

(சிலம்பு அ: அச—கூ)

உரை வருமாறு. "உள்வரியென்றது — வேற்றுருக்கொண்டு நடித்தல் என்னை?

"உள்வரியென்பது உணர்த்துங் காலை
மண்டல மாக்கள் பிறிதோருருவங்
கொண்டும் கொள்ளாதும் ஆடுதற்குரித்தே"

என்றாராகலின்; பாண்டவர் (விராட நகரத்துப்) பிறிதுருவங்

கொண்டதுவுமது. மண்டல மாக்களாவார் அரசர். மாதவியால் கோவலனை அழைத்துவர மாலையுடன் அனுப்பப்பட்ட வயந்தமாலை கூலமறுகிற் கோவலனைக்கண்டு அவனுக்கு அம்மாலையைக் கொடுப்ப அவன் (கோவலன்) "யான் ஊடிப்பிரிந்த காலத்து அந்திமாலை வந்ததாகப் பிரிவாற்றுமல் இரங்கி என் சிந்தைநோய் மிகும் வறுமையைத்தானறிந்து கிளியொத்த கிளவியையும் மடப்பம் பொருந்திய அன்னத்தையொத்த நடையினையும் களித்த மயில்போலுஞ் சாயலினையும் கரந்தனளாகி வேல் போன்ற கண்ணையுடைய தன்னுடைய சிலதியர் கோலத்தைக் கொண்டு தான் தனிவந்து நின்று நடித்த உள்வரியென்னும் நடிப்பும்"

உள்வரிக்கெதிர் கூத்துப்புறவரியாகும். அது தலைவனுடன் அணையாது புறத்து நின்று விளையாடுவது. (Dance of a woman coldly neglecting the company of her lover) என்னை?

"புறவரி யென்பது புணர்க்குங் காலை
இசைப்ப வந்து தலைவன் முற்படாது
புறத்துநின் றுடிவிடைபெறு வதுவே' என்றுராகலின்

இதற்கிலக்கியம்,

"சிலம்புவாய் புலம்பவு மேகலை யார்ப்பவும்
கலம்பெறு நசுப்பினள் காத னேக்கமொடு
திறத்துவேறுய வென் சிறுமை நோக்கியும்
புறத்து நின்றுடிய புன்புற வரியும்"

(சிலம்பு அ: கூ0—ச)

உரை வருமாறு: கலங்களைப் புனையவும் பெறுத நசுப்பினையுடையாள் சிலம்பு வாய்விட்டுப் புலம்பவும் மேகலை வாய்விட்டார்ப்பவும் ஏன்ற காதலுடையாள்போல் வந்து நோக்கிய நோக்கோடே தன்னைப் பிரிதலால் தன்மை திரிந்த எனது வறுமையையறிந்தும் என்னுடன் அணையாது புறம்பே நின்று நடித்த நடிப்பும்" இதனல் உள்வரிக்கோலத்தியல்பை எதிர்மறை முகத்தானும் உரைத்தவாறு கண்டுகொள்க.

மாதரி தன் தோழியிடத்து "நாமெல்லாம் கருடப்புள்ளையூர்கின்ற கடவுளை இக்குரவையுள் உள்வரியாகிய ஒரு பாட்டினல் போற்றுவோம்" என்றுள். (சிலம்பு கஎ; உஅ) அப்பொழுது அவர்கள் பாடியன 'கோவா மலையாரம்' முதலிய மூன்றுமாம். இப்பாட்டோ பாண்டியன், சோழன், சேரன்மேல் பாடப் பட்டன. திருமால் பாண்டியன் முதலோராக உள்வரிக் கோலங்

கொண்டதாக அவர்கள் (ஆய்ச்சியர்) கருதியமையே இங்ஙனம் கூறற்குக் காரணமாயிற்று.

இனி உள்வரிப்பாணி (பாட்டு) என்பது வேற்றுருக் கொண்டு பலபடப் புகழ்ந்து இசைப்பாட்டைப் பாடுவது. திருமால் பாண்டியன் முதலியோராக உருக்கொண்டமைகூறலின் உள்வரிப் பாணியாம். (சிலமபு கஉ: உஅ) உள்வரி வாழ்த்தென்பது பிறிதோருருவங்கொண்டுங் கொள்ளாதும் வாழ்த்துவது (சிலம்பு களஃ: உஅ அரும்) இதற்கிலக்கியம் மேற்கூறிய "கோவா மலையா ரம்" "முதலிய மூன்றுமாம் (கள : உகூ-௩க) இவற்றில் தென்னவன் முதலியோரை மாயோனாகக் கூறியதால் இராசரைத் தெய்வமென்றே பராவியதைக் காண்க.

இனி மணிமேகலையிலுள்ள இப்பகுதிகளைக் கூறுவேம்.

"உறையுட் குடிகை யுள்வரிக் கொண்ட
மறுவில் செய்கை மணிமே கலைதான்" (ககூ: உகூ-௩0)

உரை வருமாறு: இருப்பிடமாகிய சிறிய கோயிலில் வேற்றுருவங்கொண்ட குற்றமற்ற செய்கையையுடைய மணிமேகலை

"தோட்டலர்க் குழலி யுள்வரி நீங்கி (உக : க0)

உரை: மறைந்த கோலம் ஒழிந்து என்றது மணிமேகலை காய சண்டிகையின் வடிவம் ஒழிந்து என்றபடி.

"உள்வரிக் கொண்டவ் வுரவோன் பெயர்நாள் (உஉ : ௩கூ)

உரை வருமாறு. காந்தன் வேற்றுருக்கொண்டுசென்ற நாளில்.

"உள்வரிக் கோலமோ டுன்னிய பொருளுரைத்(து)
ஐவகைச் சமயமு மறிந்தனள் ஆங்கென் (உஎ. உஅ-கூ)

உரை வருமாறு. "மணிமேகலை ஆண்கோலம் தாங்கி நிற்றலின் தன்னை மறைத்த ஆண்கோலத்தோடே நின்று (முன்கூறிய இவ்) ஐவகைச் சமயங்களின் பொருள்களையும் கேட்டாள்".

சீமை ஆடையேனும் ஆலை ஆடையேனும் அணிவதையே கொள்கையாகக்கொண்டவன் கையிழையன் (கதர்) அணிந்தால் "போலிக்கோலம் போடுகிறாயா" என அவன் வினவப்படுதலை வழக்கினுள் காண்கின்றோமன்றி "மாற்றுடை அணிகின்றாயா" என்று வினவப்படுதலை காண்கின்றோமில்லை. அன்றியும் முதலாளிக் கொள்கையுடையவன் பொதுவுடைமை பேசினால் "போலிக்கோலம் பூண்கின்றாயா" என அவன் வினவப்

# ந. மு. வே. நாட்டார் பேரவை
# 13-ஆம் ஆண்டு விழா.

7—4—57 ஞாயிறு மாலை கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெரு மன்றத்தில் ந. மு. வே. நாட்டார் பேரவையின் 13-ஆம் ஆண்டு விழா அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், T. M. **நாராயணசாமிப் பிள்ளை,** M.A., B.L., அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது.

அதுபோது, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழாவின் போது டாக்டர் (இலக்கியத்துறைப் பேரறிஞர்) பட்டம் அளிக்கப் பெற்ற **சொல்லின் செல்வர்,** திருவாளர் டாக்டர் R. P. சேதுப் **பிள்ளை,** B. A., B. L., அவர்களைச் சிறப்பிக்கப் பேரவையினரால் ஓர் பாராட்டிதழ் பாடியளிக்கப்பெற்றது. அதனுள்,

" நன்றுபுரி நோக்கமருள் நடுநிலைசேர் பண்புடையோய்,
நவைகள் யாவும்
வென்றொளிரும் வீர !தமிழ் மேன்மைசெயல் வேள்வியென
விளக்க வந்தோய் !
துன்றுசுவை எண்மைஎழில் தூயகருத் தின்னடையாற்
சொல்லின் செல்வர்
என்றுபுவி மகிழவரும் ஏந்தால் !நின் இசைநுவல
எம்மா லாமே.

---

25-ம் பக்கத் தொடர்ச்சி.

படுதலையுங் காண்கின்றோம். ' சட்டை மாற்றிக்கொண்டாயா " என அவன் ஒருகால் வினவப்படினும் அது கட்சிச் சட்டையைக் குறிக்குமன்றி மாற்றுடையைக் குறிக்காதென்க.

இனிச் சிலப்பதிகாரமும் அதன் பழைய உரைகளும், மணிமேகலையுமின்றேல் உள்வரிக்கோலம் என்பதுபற்றி இத் துணைத் தெளிவாக அறியமுடியாதென்க. அழிந்த—அழிக்கப் பட்ட பண்டைத் தமிழ் நூல்களில் இதுபோன்ற எத்தனை அருஞ்சொற்கள் இருந்திருக்குமோ ? திருக்கோவையாரினுல் (செய்யுள் உ௨௭) வலக்காரம் (சூழ்ச்சி-தந்திரம் Cunning) என்றசொல் அறியப்பட்டதையும் ஈண்டு நோக்கிக் கொள்க. இச்சொல் வெற்றி (வலக்காரமுற்றூல் திருப்புகழ் ௬அசு; பொய் (சூடாமணி) வலிமை, அதிகாரம் முதலிய பொருளில் வழங்கிய தும் திருக்கோவையார்க்குப் பிற்பட்ட காலத்திற்றுனென் பதையும் மறத்தல் கூடாது.

நுழைபுலத்தால் அலகில்பல நுண்பொருள்நூல் தேர்ந்துசுவை
நுகர்ந்து துய்த்துக்
கழையமுதம் எனஉழையர் கருத்தினிக்க வழங்கியருட்
கவிதை நூலின்
விழைவுடனே திளைத்தினிக்கும் வேரியென உரைபெருக்கி
வியன்மன் றேறி
மழைஎனச்செந் தமிழ்பொழியும் வான்புலவ! தென்றல்நடை
வரையும் மேலோய்!

தலைசிறந்த தெய்வஒளி தாங்குதிரு வள்ளுவனுர்
தருநூ லுள்ளும்
கலைநிறைந்த கம்பனருள் கவிதையுள்ளும் இளங்கோவின்
காவி யத்தும்
நிலைசிறந்த புலமையினுல் நெஞ்சகத்தே நிலைக்குமுறை
நிகழ்த்தி நிற்கும்
விலையிறந்த மாமணியே! வீறுடைய சேதண்ணுல்!
விளங்கி வாழி!

கட்டுரைகள் காவியத்தின் கருத்துரைகள் ஆய்வுரைகள்
கணக்கி லாத
மட்டிருக்கும் செந்தமிழால் வரைந்தனையிம் மாநிலத்தின்
மக்கள் நெஞ்சைத்
தொட்டிழுக்கும் திறமையருஞ் சொல்லழகை ஆட்சியினர்
துருவிக் கண்டு
பட்டமொடு பொற்பரிசு பற்பலசெய் தேத்துமொரு
பாடு பெற்றேய்!"

என்றின்னன பல சிறப்புரைகள் கூறப்பெற்றன.

விழாத் தலைவரும், கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர், திரு. ச. சுயம்பிரகாசம், பி. ஏ., பி. எல்., அவர்களும், திரு. S. இராமச் சந்திரப் பத்தர், பி.ஏ., அவர்களும் டாக்டர் பிள்ளையவர்களின் தமிழ்ப் பற்று, சான்ருண்மை, அறிவு, ஆராய்ச்சி முதலியவற்றைப் புகழ்ந்து பேசினர். பாராட்டைப் பெற்றுக்கொள்ளும் முகத்தான் டாக்டர் பிள்ளையவர்கள் சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ் மொழியின் சிறப்பு உணர்ந்து தமிழுக்கு அளித்ததே இப்பட்டம் என்றும், தமிழின் எதிர்காலச் சிறப்பிற்கு இஃது ஓர் அடிப்படையும் அறிகுறியுமாகு மென்றும், இத்தொண்டினை மேலும் தொடர்ந்து செய்துவர தமிழ் அன்னை அருள்புரிவாள் என்றும் கூறி நன்றி தெரிவித்தார்கள்.

பின்னர் புலவர், திருவாட்டி, **சிவ. பார்வதியம்மையார்**, **திரு, S. மகராசன்**, பி. எஸ்சி., பி. எல்., **புலவர் க. வெள்ளை வாரணனுர்** ஆகியோர் முறையே, 'திருமுருகாற்றுப்படை', 'தமிழ் செய்த திருமூலர்', 'இளமாணுக்கன்' என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

# மதிப்புரை.

## ‘தமிழிசைப் பாடல்கள் பதினொன்றாம் தொகுதி’

அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு ஆசிரியர்: சிதம்பரம் சங்கீத வித்துவான், திரு. C. S. நடராசசுந்தரம் பிள்ளை. தொகுப்பாசிரியர் குடந்தை, சங்கீதம் திரு. ப. சுந்தரேசன் அவர்கள்.

முத்தமிழுள் ஒரு கூறாய் நடுநின்று சிறக்கும் இசைக் கலையைப் பண்டைத் தமிழ் மக்கள் மிடற்றாலும் யாழ் முதலிய கருவிகளானும்வளர்த்து இலக்கியஞ்செய்து இலக்கணம்வகுத்துப் போற்றினர் என்பதற்குத் தேவார, திருவாய்மொழிகளும், சிலப்பதிகாரமும், அதன் உரைகளுமே சான்றாகும், ஆயினும் இடைக் காலத்தெழுந்த பல சூழ் நிலைகளால் இசை வளர்ச்சி குறைந்து பண்ணோடு கூடிய உருப்படிகளும், செய்யுட்களும் மிக்குத் தோன்றாவாயின. பின்னர், கன்னடம், தெலுங்கு, வடமொழி களில் இசைத்திறம் சான்ற புலவர்கள்செய்த கீதம், வர்ணம், கீர்த்தனை, பதம் ஆகிய உருக்கள் போற்றிப் பயிலப்பட்டன. இந் நிலை தமிழ் மொழியில் இசை நுணுக்கம் அமைந்த பாடல்களைச் செய்ய இயலாது என்று பிறர் கூறுமளவிற்குத் தமிழ் மக்களுக்குச் சோர்வளித்துவிட்டது. இதனை மாற்றித் தமிழிசைக்குப் புத்துயிர் அளித்து வளர்க்க அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முற்பட்டுத் தக்க புலவர்களைக்கொண்டு இசை உருக்களை இயற்றி இருபது தொகுதிகளை வெளியிட்டு இப்பொழுது இசைவாணர் C. S. நடராசசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய பாடல்களை இருபத்தொன்றாம் தொகுதியாக வெளியிட்டுள்ளது. தமிழிசை யறிவும் ஆராய்ச்சித் திறனும்சான்ற குடந்தை சங்கீத வித்துவான் ப. சுந்தரேசன் அவர்கள் இதனைத் தொகுத்துள்ளார்கள். துணை வேந்தர் தம் அணிந்துரையில் கூறியுள்ளபடி நயமிக்க இப்பாடல் களை இசைவாணர்கள் இசைத்தும், இசைத்தட்டுக்கள் வாயிலாகப் பரப்பியும் வளர்ப்பதே இந்நூலாசிரியர்க்குச் செய்யும் கைம்மாறாகும். இதுபோன்ற நற்பணிகளைச்செய்து தமிழிசை வளர்க்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

# நற்றிணையில் தாவரங்கள்.

**வித்துவான், சொ. சிங்காரவேலனர்,**
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்.

## குமிழ் :

குமிழம் பூவினையொத்த மூக்கு என்று குறித்துத் தலைவியின் பேரெழிலை இசைக்காத தமிழ்ப் புலவர் இல்லை. இக்குமிழ மரத்தினைப் பற்றி நற்றிணை நல்கும் குறிப்புகள் நலமிக்கவை. இம்மரம் பாலை நிலத்தேயே செழித்து வளரும் ஒன்ருகும். 'சுரம்' என்று சொல்லப்பெறும். நெறியிலே இம்மரம் இருந்ததனை இருபெரும் புலவர் பெருமக்கள் நமக்கு எடுத்துக் காட்டுகிருர்கள். ஒருவர் பரணர். மற்ருெருவர் காவன்முல்லைப் பூதனர்.

இரவுக்குறிப்பாற்பட்டுத் தலைவன் ஆற்ருமை அடைகின்ருன். தன்நெஞ்சோடு அவன் சில சொல்கின்ருன். அவனது நோக்கம் நெஞ்சோடு நுவலுவதன்று, நெஞ்சொடு சொல்லுதல் போன்று தோழியின் செவிகளில் சில சொற்களைச் சொல்லுதலே அவனுடைய கருத்தாகும். நீரிலே வளரும் ஆம்பல் தண்டினது நாருரித்தாற் போன்ற நிறமான மாமையையும், குவளைபோன்ற அழகிய மழைக் கண்களையும், திதலை அல்குலையும், பெருந்தோளிணையையும் உடைய குறுமகள் தலைவி. அவளிடம் சென்று எமது வருகையைச் சொல்லுவோர் உளராயின் அவரை நோக்கி 'இவர் யார்' என்று கேட்டுவிட மாட்டாள் என் காதலி. சுரத்திலுள்ள குமிழ மரத்தின் வளைந்த மூக்கினையுடைய முற்றிய கனிகள் கீழே உதிர்ந்து, ஆங்குக் குதித்து விளையாடுகின்ற இளமானுக்கு வெறுப்பில்லாது உணவு ஆகின்ற வல்வில் ஓரி என்பானுக்குரிய கானம்போல நறுநாற்றம் உடையவாகிக் கரிய பலவாகிய கூந்தலை உடைய அவள்தான் யாம் வந்தனம் எனவே பெரும்பேதுறுவள்; ஆனல் அவ்வாறு சென்று சொல்வாரை யாம் பெற்றேமில்லையே' என்று தலைவன் கூறினன். இவ்வினிய பாடலுள் பரணர் சுரநெறியில் வளர்வதொரு மரம் குமிழ மரம் என்பதையும், அதன் பழங்கள் வளைந்த மூக்கினை உடைய வடிவம் தாங்கியவை என்பதையும், அம்முற்றிய குமிழம் பழங்களை மான்கள் விரும்பி உண்ணும் என்பதையும், இளமான்கள் விழைந்து உண்ணுமளவிற்கு இனிய சுவை மிக்கவை அவை என்பதையும் புலப்படுத்தியுள்ளார். (6) காவல் முல்லைப் பூதனர் (274) தம் பாடலுள் இதன் வேறு சில இயல்புகளை இயம்பியுள்ளார். மலையையடுத்த நெறியில் இம்மரம் வளர்ந்திருந்ததையும், உழைமான் சென்று அதன் அடிமரத்தில் உராய்ந்ததையும், அதனல் பழங்கள் உதிர்ந்து தரை

*" அத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி
எறிமட மாற்கு வல்சியாகும்
வல்வில் லோரி கானம்" (6)

யெலாம் பரவினமையையும், அவை இழைமகள் ஒருவள் அணிந்த பொன்செய் காசுகள் பரவிக்கிடந்தது போன்றமையையும், அவர் அப்பாடலுள் அருளியுள்ளார். * இதனால் இப்பழங்கள் மஞ்சள் நிறமாகிய பொன்னிறம் பெற்றிருந்தன எனவும், வட்ட வடிவினவாய் இருந்தனவெனவும் எண்ண இடமுண்டு. இவ்விரு பாடல்களே குமிழ் பற்றி நற்றிணை குறிக்கும் இனிய எழிலோவியங்களாம்.

புன்கு :

'புன்கு' இப்போது 'புங்கு' என்று மக்கள் வாயிற்புகுந்து புறப் படுவதை நாம் அறிவோம். இதுபோலவே 'தென்கு' 'தெங்கு' என வழங்குதலை வல்லோர் ஆராய்ச்சியாலும் அறிந்துள்ளோம். புன்க மரம் ஆற்றங்கரையோரங்களில் இயல்பாகப் பொலிந்து தோன் றுதல் கண்கூடு. இதன் பூக்கள் இளவேனிற்காலத்தே செவ்விபெற மலர்ந்து ஆற்றுநீரில் மிதந்து அருமணம் பரப்பி நம் கண்ணுக்கும் நெஞ்சுக்கும் நல்விருந்தளித்தலை நாம் உணர்வோம். பொரி போலப் பூக்கும் இயல்பினது இம்மரம். எனவே இதனைப் 'பொரிப்பூம் புன்கு' என்றே புகலுதலும் பெருவழக்காகும். 'திருவீழிமிழலையிலே வயல் களில் தாமரை மலர்ந்துள்ளது; நத்தைகள், சங்குகள் நீரில் உலவு கின்றன; அத்தாமரை அக்கினிபோல் தோன்றுகின்றது; மருங் கிருந்த புன்கு மரம் இளங்காற்றால் அசைகின்றது; பூக்கள் பொல பொலவென அம்மலரில் உதிர்கின்றன. ஆம்; பொரி போல', இயற்கை நிகழ்த்தும் திருமணக் காட்சியாகக் காணுகிறார்கள் திரு ஞானசம்பந்தர். புன்கு பொரிபோலப் பூக்கின்ற புதுமையிலே கற்பனையும் புகுந்து புரட்சிசெய்த அருள்நிலையை அங்குக் காணலாம்.

பாலை பாடிய பெருங்கடுங்கோ நற்றிணையில் இம்மரத்தின் எழிலில் ஈடுபட்ட இயல்பைப் புலப்படுத்தியுள்ளார். உடன்போகின்ற தலைவன் தலைவியின்பால் உரைக்கின்றான். 'வழிபடு தெய்வம் கட் கண்டதுபோல நின்நலமென் பணைத்தோள் எய்தினேன்; இனிநீ பொரிபோல மலர்ந்த புன்க மரத்தினது அழகிய நலம்சான்ற ஒள்ளிய தளிரைச் சுணங்கு நிரம்பிய அழகிய முலையிலே செறித்து வருந்தாதேகுக'! என்கின்றான் அத்தலைவன். இங்கே புன்க மரத்தின் பூ பொரியனைய சிறப்பும், அதன் தளிர் அழகும் புலப்படுத்தப்பெறு கின்றன.*

---

*" படுமழை பொழிந்த பகுவாய்க் குன்றத்து
உழைமான் அம்பிணை தீண்டலின் இழைமகள்
பொன்செய் காசின் ஒன்பழம் தாம்
குமிழ்தலை மயங்கிய குறும்பல் அத்தம்" (374)

* 'பொரிப்பூம் புன்கின் எழில்தகை ஒண்முறி
சுணங்கணி வனமுலை அணங்குகொளத்திமிரி...
வருந்தா தேகுமதி வாலெயிற்றோயே'

**விளா :**

விளா மரம் விளங்கனியாற் சிறப்பெய்தியதாகும். யானையுண்ட விளங்கனி உள்ளீடற்று ஓடளவேயாகுமென்பது தமிழ் இலக்கியங்களிற் பயின்றவோர் செய்தி. 'வெள்ளிற்கனி' என்றும் வழக்காறுண்டு. இம்மரத்தைப்பற்றிய செய்திகளை இரண்டு நற்றிணைப் பாடல்களிற் காண்கின்றோம். செய்திகளை அருளிய பாவலர்கள் கயமனாரும், கணக்காயனாரும்.

உடன்போக்கு அஞ்சுவிக்கிருள் தோழி. வைகு புலர் விடியல் வேளை. வீடுகளில் தயிர்கடைகின்றனர் பெண்டிர். 'நெய்தெரி இயக்கம்' அல்லவா அது! கயிறிட்டு நாள்தோறும் கடைதலால் பாசந்தின்ற தேய்ந்த மத்து; பெரிய பானை; அதிலே மணங் கமழ்கின்றது. மணத்துக்கென விளாம்பழத்து ஓடுகளை இட்டிருப்பர் அதனுள் அக்காலத்தவர். அம்மணம் 'கம்'மெனக் கமழும் குழிசியாம் அது. அத்தகைய விடியலில் சிலம்பைக் கழற்றிப் பந்தொடு வைக்கப்போகின்ற தலைவி தலைவனோடு செலவு கருதி மகிழ்வுற்றவளேயாயினும், உறவுகொண்ட உற்றாரைப் பிரிதற்கு ஆற்றாது கண் கலுழுவள் என்று தோழி கூறிமுடிக்கின்றாள்.* இங்கே தயிர்ப் பானையில் மணத்துக்காக விளாம்பழ ஓடுகளை விட்டுவைப்பர் தமிழர் என்ற ஓர் பழைய வழக்கை நாம் அறிகின்றோம். இன்றும் மிளகுச் சாறு வைக்கும் தமிழ்க் குடும்பங்களில் விளாம்பழ ஓட்டினை இட்டு அம்மணம் கமழக் கமழ வைப்பது ஓர் வகையாகக் கொள்ளப்படுகின்றது. அதனை 'விளாம்பழ ரசம்' என்று வியந்துரைத்து உட்கொண்டு உவப்பர்.

பொருட் பிரிவுக்கு உடம்பட்டாள் தோழி. அவளைக்கண்டு தலைவி உவந்துபேசுகின்ற பேச்சாகக் கணக்காயனார் கவின்பெறப் பாடுகின்றார். அவர் பேச்சிலே உள்ளதன் தன்மை ஒளிவிடுகின்றது.

'தலைவர்' வேற்று நாட்டு அகன்ற வழியில் நாம் செல்லுதும் என்று சொல்ல நன்றென்று உடன்பட்ட என் அன்புசான்ற தோழியே! நீ நன்று செய்தாய். முயற்சித் திறத்தால் வினை முடிக்கக் கருதும் தமிழ் நாட்டு ஆடவர் பொருள்தேடப் பிரிவர்; அதனை மறுத்துக் கூறாது ஒத்து நிற்றலே நம் நாட்டு நங்கையர்க்கு ஏற்ற பண்பாகும்' என்று தலைவி கூறுகின்றாள். வேற்று நாட்டு அகன்ற வழியை விவரிக்குங்கால் அங்கே விளாமரக் காட்சியினை வரைகின்றார் கவிஞர். 'நிலம் பிளவு படுமாறு இறங்கிய வேரும், பெரிய கிளைகளும் அடியில் உடும்பு செறிந்தாற்போன்ற பொரிந்த செதில்களும் உடைய நீண்ட விளா மரம்; அதன் கிளைகளில் நுனி

* 'விளாம்பழங் கமழும் கமஞ்சூல் குழிசி
பாசந்தின்ற தேய்கால் மத்தம்
நெய்தெரி இயக்கம் வெளில்முதல் முழங்கும்
வைகுபுலர் விடியல்'

முறிந்து விழுகின்றன விளாம் பழங்கள்; கீழே கம்பளம் விரித்தாற் போன்று பச்சைப் பசேரென்று பயிர்கள்; ஆடுதலொழிந்த பந்துகள் கிடப்பதுபோன்று அப்பழங்கள் பயிர்கள்மேல் பலவாகக்கிடக்கின்றன. ஆம்; அவ்விளாம் பழங்களேயே உணவாக உடைய அயல் நாடு' என்று கூறுகின்றார். இங்கே விளா மரம் பொரியரை உடையதென் பதும், நன்கு ஆழ வேர் விடும் என்பதும், முதிர்ந்த கனிகள் உதிர்ந் திடும் இயல்புடையன என்பதும் பெறப்பட்டன. உடும்பின் செறிவை அம்மரத்துச் சருச்சரைக்கும், ஆட்டொழிந்த பந்துகளை வீழ்ந்து கிடக்கும் கனிகளுக்கும் உவமையாக உரைத்துள்ள கவிஞரின் கவித் திறம் உன்னற்குரியது.*

**மராஅம்:**

வெண்கடப்ப மரம் ஓரிடத்திற் குறிக்கப்பெற்றது. இதன் அழகிய பூங்கொத்தினை மகளிர்தம் கூந்தலிற் புனைந்து பொலிவர். அரு மணம் வீசி அழகு பொலியும் மராமரத்தின் மலர் என்பதனை ஓரம் போகியார் (20) உரைத்துள்ளார்.

'அவிழிணர்த்
தேம்பாய் மராஅங் கமழுங் கூந்தல்'

என்பது ஓரம்போகியார் திருமொழியாகும்.

**ஆல்:**

ஆல மரம் 'முது மரம்' அல்லவா? 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி' என்ற தொடரை யாரே அறியாதார்? 'ஆலமர் செல்வன்' என்று சிவபிரான் குறிக்கப் பெற்றுள்ளார். புறநானூறு, கலி போன்ற பழம்பெரும் இலக்கியங்களுள் இவ்வழக்காற்றினைக் காண லாகும். இதன் நிழல் எங்கும் போற்றப் பெறும். 'மன்னர்க் கிருக்க நிழலாகும்மே' என்று பாராட்டப் பெறுவதன்றோ இது. நற்றிணையிலும் இந்நிழலைப் போற்றிப் புகழ்ந்திருக்கின்றனர் அம் மூவனார் என்ற புலவர்.

மழைஇல்லாத வறண்ட வழியிலே உலர்ந்த காட்டிலே தலைவன் தலைவியை நோக்கி,

'ஆல நீழல் அசைவு நீக்கி
அஞ்சுவழி அஞ்சாது அசைவுழி அசைஇ
வருந்தா தேகுமதி வாலிழைக் குறுமகள்' (76)

என்று வாயாரக் கூறினன்.

(தொடரும்)

---

* 'பார்பக வீழ்ந்த வேருடை விழுக்கோட்டு
உடும்படைந் தன்ன நெடும்பொரி விளவின்
ஆட்டொழி பந்திற் கோட்டுமூக் கிறுபு
கம்பலத் தன்ன பைம்பயிர்த் தாஅம்
வெள்ளில் வல்சி வேற்று நாட்டு ஆரிடை' (24)